உ

சிவமயம்.

# தசகாரியவிளக்கம்.

23 JUN 1914

இஃது

திருமந்திர நகரமென்னும் தூத்துக்குடிச்
சைவசித்தாந்தசபை உபஅக்கிராசனாதிபதியும்,
மதுரைத் தமிழ்ச்சங்கத்து அங்கத்தினருமாகிய

பொ. முத்தையபிள்ளை

இயற்றி,

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார்மடாலயத்தில்
ஞானாசிரியராயெழுந்தருளியிருக்கும்
ஸ்ரீ-ல-ஸ்ரீ
சிவசண்முகமெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளால்
அங்கீகரிக்கப்பெற்று

திரிசிரபுரம் சைவசித்தாந்த சபையாரும்,
திருச்செங்கோடு சைவசித்தாந்த சபையாரும்
விரும்பியவண்ணம்

தஞ்சை
ஸ்ரீ வித்தியாவிநோதினி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

தன் விலை] 1910. [அணா 8.

Copy-Right Registered.

# விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டுவோர் தூத்துக்குடி மேலூர் பங்களாத்தெரு மு. பொன்னம்பலம் பிள்ளையிடத்திலும், தஞ்சாவூர் ஸ்ரீ பால்சுவாமிகள் மடாலயத்தின் அதிபதி ஸ்ரீ-ல-ஸ்ரீ கிருஷ்ணசாமி சுவாமி அவர்களிடத்திலும் முன்பணம் அனுப்பியாவது, வி. பி. மூலமாயாவது பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை அணா 8.

வி. பி. சார்ஜ் அணா 2 பிரத்தியேகம்.

உ

சிவமயம்

# சிறப்புப்பாயிரம்.

திருப்பாதிரிப் புலியூர்ச் சந்நிதி வீதியிலுள்ள
ஸ்ரீஞானியார் மடாலயத்தில் ஞானாசிரியராக
எழுந்தருளியிருக்கும்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான
சிவாசாரிய சுவாமிகள்
திருவாய்மலர்ந்தருளியது.

நிலைமண்டில ஆசிரியப்பா.

உலகெலா முணர்ந்தே யோதற் கரியோன்
வாணுதல் வரிக்கண் மாதுமை கணவன்
முத்திறத் தணுக்கண் முறையறிந் துய்வா
னாகமா கமமெனு நின்மல முறையைத்
தந்தருள் செய்தான் றமியெனை யாள்வான்
அம்முறை துணிந்தே யரும்பயன் வீட்டை
யணுகுறும் பருவர்க் கமைத்துறு செய்கை
தசகா ரியமெனுஞ் சத்தியப் பொருளே
சீர்த்தச காரியச் சிறப்பியன் முற்றும்

விரித்துக் கிளந்தன விமலவா கமங்கள்
செந்தமிழ் நூலிற் றெருகுத்த யாப்பான்
நல்லுமா பதியார் முதலிய நற்றவர்
அருள்செய் தவனி புயச்செய் தனரால்
அத்துவித வுண்மை யனைத்துங் கண்ட
வித்துவ * சத்திய ஞானங் கண்டார்
வழிவழி வந்த † வள்ளல் பல்லவர்
வகைப்படுத் துதவித் தகையுறுத் தினரால்
குன்று முட்டிய குரீஇகிலை யென்ன
விடருறும் பருவர்க் கிடுக்க ணற்ற
வேதம் முதலா விளம்புபன் னூலும்
இலைப்புறா சிலைத்தன வியைபுற நாடி
யயரா வன்புகண்ட ருள்செய் பசுபதி
யருட்பெருக் கொன்றே யருந்துணை யாக்கொடு

---

* சத்தியஞானங்கண்டார் = மெய்கண்டதேவர்.

† ஈண்டு வள்ளலென்றது தசகாரிய முதலிய பண்டார சாத்திரங்களனுக்கிரகித்த திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து ஞானசிரியர் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆதி அம்பல வாணதேசிகர் முதலிய பண்டார சந்நிதிகளை.

மூவிய லறிசன் முறையா தலினுன்
மூவியல் வகையின் முறைசேர் நற்றச
காரிய விளக்கமென் கவின்பெறு நூலை
நுனித்த வறிவின் விரித்துச் செய்து
மேம்பா டுற்றுன் றேம்ப லில்லான்
அன்ன மேலோ னுரென வினவின்
விம்ம னீக்கு மெம்மந் திரமும்
பெறுமுறை காட்டப் பெருந்தகை யாடல்செய்
திருமந் திரமெனுஞ் செல்வநன் னகரான்
அடக்க மமரரு ளுய்க்குமென் விதியை
மாற்றிமா தேவன் மலரடி யுய்க்குமென்
றுக்குஞ் சில னரும்பொருள் பலவுங்
கேட்பவர் மனங்கொள வேணியர் வேட்ப
மொழிபிர சங்க விழுமிய சமர்த்தன்
நற்றவ மகிழ்தலை பெற்றசீ ரென்போன்
கரண மூன்றுங் கடுக்கைச் சடையோ
னடிமல ரிருத்தி யவனரு ளொன்றே
பொருளெனக் கருது பொருவில் சங்கற்பன்
எவ்வ மகற்றுஞ் சைவநூல் பலவுங்

கோதறத் தெரிந்த குணக்குன் றனையான்
ஏனைய சாத்திர வியலு முணர்ந்தோன்
முத்தைய நாமப் பத்திவல் லோனே.

சிவமயம்.

# நூன்முகம்.

காட்சிக்குப் புலனாய்ச் சுட்டியறியப்படும் பிர பஞ்சமாகிய உயிரில்பொருளொன்று. மலமறைப் பால் அதனை விரும்பியும் வெறுத்தும் சுட்டியறி யும் உயிர்ப்பொருளொன்று. அங்ஙனம் சுட்டி யறியும் உயிர் வேண்டியசெய்தாதொழிதலும் வே ண்டாத செய்தலும் ஒரோவழி வேண்டியவேண்டி யாங்கெய்தலுங் காண்டலின், அவ்வாறு செய்விப் பான் வேண்டப்படும் இறைப்பொருளொன்று. ஆகப்பொருள்கள் மூன்றுண்டென்பது. உயிரில் பொருள் உயிர்ப்பொருள் பலவாயினும் சித்துச் சாதி சடச்சாதி யென்னும் சாதியொருமைபற்றி ஒருமையாகக் கூறப்பட்டது.

முற்செய்வினையே இன்ப துன்ப நுகர்ச்சியை உயிர்களுக்குத் தருமென்று வேதாகமங்கள் கூறு தலின், எய்துதலும் எய்தாதொழிதலும் செய்விப் பது வினையென்று கூறுதலே பொருத்த முடை

த்து இறைவன் வேண்டுமென்றல் மிகையாமெனின் அன்று. என்னை? செய்த வினையும் உடலுங் கெட்டொழிதலானும் உயிர் செல்லிடமறிந்து பய்னுதவு மறிவு வினைக்கின்மையிற் சடமாதலானும் உழவர் செய்யுந் தொழிற்குத் தக்கபயனை விளைநிலம் விளைவிப்பதுபோல உயிர்கட்கு வினைப்பயன்களை இறைவனே யறிந்து கூட்டுவிப்பனாதலினென்க.

அற்றன்று. செய்தவினை கெட்டொழிதலின்றிப் புத்தி தத்துவம் பற்றுக்கோடாக விருக்குமாதலின் வினையே பயன்தருமெனின் முளைத்தற் சத்தி வித்தினிடத்தில் தங்கியிருப்பினும் நிலமும் தண்ணீரும் கூடிய வழியன்றி முளையாதவாறு போலப்புத்தி தத்துவம் பற்றுக்கோடா யிருக்கின்ற வினையும் இறைவன் சத்தி சங்கற்பத்தாலன்றிப் பலன் தராதென்க.

அங்ஙனமாயினும் வினைகள் போல உயிர்கள் சடமின்மையின் உயிர்களே வினையின் பயனை அறிந்தெடுத்துக் கொண்டு நுகரும் இறைவன்வேண்டு

மென்றல் சாலாதெனின், உயிர்களுக்குத் தமக் கெளச் சுதந்தர அறிவின்மையால் ஒருவன் எடு த்து நேரோக்கப் பிடித்த வழி இரும்பினை வலித்துக் கொள்ளும் காந்தம்போல வினைப்பயனை பிறழாமற் கூட்டுவிப்பானொரு முதல்வன் வேண்டு மாதலிற் சாலு மென்க.

மாயாகாரியமாகிய பிரபஞ்சத்தைக் கூறவே மாயை யுண்மை பெற்றும். வினையாகிய கன்ம மலமும் ஆணவ மலமும் வேறுளவாதலிற் பொருள் கள் மூன்றேயெனவரையறுத்ததென்னை யெனின், ஆணவமலம் முறுகிக் கெட்டொழிதற் பொருட் டும் கன்மமலம் புசிப்பித்து நீக்குதற் பொருட்டும் மாயையை இறைவன் காரியப்படுத்திக்கூட்டுதலால் மாயாகாரியத்தைக் கூறவே உபலக்கணத்தால் ஏனை யவும் கொள்ளப்படுமாதலின் வேறுவைத் தெண் ண வேண்டாவாயிற்று. இவ்வாறன்றி அவ்வைந் தினொடு சுத்த மாயையும் சேர்த்துப் பொருள்கள் ஆறெனக் கூறுதலு மொன்று. இதனை "ஏகனனே கனிருள் கருமமாயை யிரண், டாகவிவை யாறு தியில்" என்ற ஆன்றோர் வாக்கானு முணர்க.

இனி இம்முப்பொருள்களுள் இறைப்பொருளும் உயிர்ப்பொருளும் சித்தென்னும் சாதி பொருமை பற்றி உடனுய் விரவி நிற்றற் குரிய இயைபுடையன. பாசப் பொருள் சடச்சாதியானமையின் அங்ஙனம் விரவி நிற்றற் குரிய இயை பின்றுயினும் செயற்கையால் உயிர்ப்பொருளோடு அநாதியே விரவி நிற்கும். இவ்வாறு இயையில்லாத மலத்தின் சேர்க்கையால் உயிர்கள் பிறந்திறந்துழல் வனவாய் துன்பத்தைப் பொருந்தும். அத் துன்பத்தை நிவிர்த்தித்துச் சாதிபற்றித் தன்னேடியை புடைய இறைப்பொருளோடு பிரிப்பின்றி நிற்றலே உயிர்க்கு இன்பமாம். உயிர் துன்பத்தினின்று நீங்கும் போதும் இன்பத்தைச் சென்றடையும் போதும் துன்ப இன்பங்களுக்கு நிலைக்களமாயுள்ள பாச பதிப்பொருள்களிடத்தும் அப்பொருள்களை விடுதல் பற்றுதல் செய்யும் தானுகிய ஆன்மாவினிடத்தும் உண்டாம் செயல்கள் பத்து வகைப்படும். இப்பத்துக் காரியங்களைத்தான் ஞான சாதனமும் பயனுமான தசகாரியமென்று சைவ சித்தாந்த சாத்திரங்கள் கூறும்.

உயிர்கள் நிலைபேறுடையனவல்லாத பிரபஞ்சப் பொருள்களை மெய்யெனக்கருதி அவற்றால் வரும் இன்பநுகர்ச்சிக்குச் செய்யும் செயல்போலன்றிப் பொய்ப்பொருளைப் பொய்யெனக் கண்டு நீத்துமெய்ப்பொருளை மெய்யெனநாடி இன்புறச் செய்யும் இச்செயல் உண்மைச் செயலாதலானும் இச்செயலே முத்தி கூடுதற்கு வழியாதலானும் இத்தசகாரியத்தையே தனித்தெடுத்துக் கூறிவிளக்கும் நூல் உண்மை நெறிவிளக்க மென்னும் பெயரால் சைவசித்தாந்தசாத்திரம் பதினான்கினுள் ஒன்றாக வழங்கி வருகின்றது.

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை தருமபுர ஆதீனங்களில் ஞானாசிரியராய் எழுந்தருளியிருந்த பண்டார சந்நிதியவர்களில் சில ஆசிரியர் தங்கள் சுவாநுபவத்தைத் திரட்டிப் பலநூல்கள் செய்திருக்கின்றார்கள். அவற்றிற்குப் பண்டார சாத்திரமென வழங்கிவருகின்றன. அந்நூல்களுள்ளும் தசகாரியமென்னும் பெயரால் அநேக நூல்கள் ஏட்டுப் பிரதிகளிலிருக்கின்றன. அவற

றுள் சில பிரதிகள் நான் பார்க்கும்படி திருவருள் உபகரித்தது.

அப்பிரதிகளினும் மேற்கூறிய உண்மை நெறி விளக்கத்தினும் தசகாரிய விலக்கண மொன்றே தொகுத்துக் கூறியிருத்தலால் அத்தசகாரிய விலக்கணத்தினையும், தோன்றும்போது சிற்சில சேர்ந்து உடனிகழ்ச்சியாய்த் தோன்றும் முறைமையினையும் காட்சிப்படும் பேதத்தினையும் முறையே இலக்கணவியல், அநுபவவியல், காட்சியியலென மூன்றியல்களாகச் சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலிய சித்தாந்த நூல்களில் ஆண்டாண்டுச் சங்கிரகமாகக்கூறும் கருத்து வகைபற்றியும், சிவஞானபோதத்திற்கு மாதவச் சிவஞானயோகிகள் செய்தருளிய சிவஞானமாபாடியக் கருத்து வகைபற்றியும் என் சிற்றறிவுக்கு எட்டியவாறு திருவருளைத் துணையாகக் கொண்டு ஒருவாறு தனித்தெடுத்து விளக்குதலின் இந்நூற்குத் தசகாரிய விளக்கமெனப் பெயராயிற்று.

சிதம்பரத்தில் கூடிய சைவ சித்தாந்த மகா சமாஜம் முதற் கூட்டத்தில் இலங்கை ஆனரபிள் ஸ்ரீமான் பொ. இராமநாதன்துரை அவர்கள் அக்கிராசனத்தில் தசகாரியமென்னும் தலைப்பெயரால் யானொரு உபந்நியாசம் செய்தேன். அப்பொழுது அங்கு விஜயஞ்செய்திருந்த திரிசிரபுரம் சைவ சித்தாந்த சபையாரும் திருச்செங்கோடு சைவ சித்தாந்த சபையாரும் இத்தலைப் பெயராலேயே ஒரு நூல் எழுதி அச்சிட்டுத் தரவேண்டுமென்று விரும்பினர். அங்ஙனமே அவர்கள் விருப்பத்தை மறுத்தற்கஞ்சி இதனை அச்சிற் பதிப்பித்து வெளியிடத் துணிந்தனன்.

## அறிவுடையோர் பலருக்கும் விண்ணப்பம்.

இதனுட்காணும் குணத்தைத் திருவருளின் பாலும், குற்றத்தை யென்சிற்றறிவின் பாலும் நிகழ்ந்தனவாகக் கொண்டு அன்புகூர்ந்து குற்றத்தை யெனக்குத் தெரிவிக்கும்படி பிரார்த்திக்கின்றேன்.

அங்ஙனம் தெரிவிக்கும் பெரியோர்களுக்கு யான் என்றும்மறவா நன்றி செலுத்தும் கடப்பாடுடையனு யிருக்கின்றேன்.

அன்றியும், இந்நூல் இரண்டாம் பதிப்புப் பெறுமாயின் அதில் திருத்தி வெளிப் படுத்துவதுடன் உபகரித்த அப்பெரியார் பேரும் முகவுரையில் தெரிவிக்கலாகும்.

## நன்றி கூறல்.

இந்நூல் வெளி வருவதற்குப் பொருளுதவி புரிந்த நன்கொடையாளருக்கும் அச்சிடுங்கால் வசித்தற்கு இடம் முதலிய பலஉபசாரங்கள் செய்துதவிய தஞ்சை ஸ்ரீபால்சுவாமிகள் மடாலயத்தின் அதிபதி யவர்களும் கல்வி யறிவொழுக்கங்களிற் சிறந்தவர்களுமாகிய வேதாந்த பரம்பரை ஸ்ரீ-லஸ்ரீ கிருஷ்ணசாமி சுவாமிகளுக்கும் என்னுடைய அன்பார்ந்த வந்தனம் செலுத்துகின்றேன்.

இதனைப் பலகாலும் சிந்தித்துத் திருவருள் தோற்றுவித்ததை அவ்வப்பொழுது ஞாபகக்குறிப்பாக எழுதி வைத்திருந்தேன். அவற்றை ஒருங்கு தொகுத்தெழுதியும் புரூப் அவ்வப்பொழுது கவனித்துப் பார்த்துத் திருத்தியும் உபகரித்தவர்கள், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத்தில் ஆராய்ச்சி அநுபவம் என்னும் இருபேரறிவும் ஒருசேரப்பெற்று ஞானாசிரியராயெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஷண்முக மெய்ஞ்ஞானசிவாசாரியசுவாமிகள் மாணுக்கரும், தஞ்சைக் கவர்ன்மெண்டு பெண்கள் பாடசாலை உபாத்தியாயருமாகிய கூடலூர் தாலுகா முருகேசன் பேட்டை மகா-ா-ா-ஸ்ரீ அ॥ முத்தைய முதலியாரவர்களே.

தங்களுடைய உத்தியோக சிரமம் தேகசிரமம் கவனியாது நான் வேண்டும் போதெல்லாம் தடையின்றி என்னுடனிருந்து உபகரித்த இவர்களது பெருந் தகைமைக்கு யான் யாதுகைம்மாறு செய்ய வல்லேன்.

இவர்களுக்கு நான் என்றும் நன்றியறிதலுடையவனு யிருப்பதுடன் நீண்ட ஆயுளும், மாறுப்டரோபகாரச் சிந்தையும், திருவருளும் உண்டாகும் வண்ணம் எல்லாம்வல்ல இறைவன் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

இங்ஙனம்,

பொ. முத்தையபிள்ளை,

தூத்துக்குடி.

# தசகாரிய விளக்க அட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| இலக்கண வியல் | 5 முதல் 86வரை. |
| அநுபவ வியல் | 87 ,, 103 ,, |
| காட்சி யியல் | 104 ,, 108 ,, |


## இலக்கணவியலின் உள்ளுறை.


| | |
|---|---|
| தத்துவரூபம் | 6 |
| தத்துவ தரிசனம் | 32 |
| தத்துவசுத்தி | 33 |
| ஆன்மரூபம் | 36 |
| ஆன்ம தரிசனம் | 38 |
| ஆன்மசுத்தி | 39 |
| சிவரூபம் | 41 |
| சிவதரிசனம் | 45 |
| சிவயோகம் | 51 |
| சிவபோகம் | 64 |


## தத்துவரூபத்தின் உள்ளுறை.


| | |
|---|---|
| சிவதத்துவம் | 10 |
| வித்தியாதத்துவம் | 12 |
| ஆன்மதத்துவம் | 22 |

## வித்தியாதத்துவத்தின் உள்ளுறை.


| | |
|---|---|
| காலதத்துவம் | 12 |
| நியதிதத்துவம் | 13 |
| கலைதத்துவம் | 15 |
| வித்தியாதத்துவம் | 16 |
| அராகதத்துவம் | 18 |
| புருடதத்துவம் | 21 |


## ஆன்மதத்துவத்தின் உள்ளுறை.


| | |
|---|---|
| புத்திதத்துவம் | 23 |
| அகங்காரதத்துவம் | 24 |
| மனம் | ,, |
| சித்தம | 25 |
| ஞானேந்திரியம் | ,, |
| கர்மேந்திரியம் | ,, |
| தன்மாத்திரை | ,, |
| புரியட்டக சரீரம் | 26 |
| பஞ்சபூதம் | ,, |
| ஆகாயம் | ,, |
| வாயு | 27 |

அக்கினி 27
அப்பு ,,
பிருதிவி ,,
பஞ்சீகரணம் 29
பஞ்சசரீரம் 31

## சிவதரிசனத்தின் உள்ளுறை.

திருவடியறிதல் 46
திருமுகம் அறிதல் 47
திருமுடியறிதல் 48

## சிவயோகத்தின் உள்ளுறை.

பெரியபுராணத்துச் "சிவனடியேசிந்திக்கும்
என்ற செய்யுளின் கருத்து 57

## சிவபோகத்தின் உள்ளுறை

மலம் அறவே நீங்கும் 69
எல்லா ஆன்மாக்களும் ஒருசேர முத்தியடையுமா
வென்னும் வாதம் 78

## அநுபவவியலின் உள்ளுறை.

ஆன்மரூபத்தில் தத்துவரூபமும் தத்துவ
தரிசனமும் 92
சிவரூபத்தில் தத்துவசுத்தியும் ஆன்ம
தரிசனமும் 94
சிவதரிசனத்தில் ஆன்மசுத்தி 98
சிவயோகம் 101
சிவபோகம 103

## காட்சியியலின் உள்ளுறை.

தத்துவரூபம் திரிபுக்காட்சி 107
தத்துவதரிசனம் ஐயக்காட்சி ,,
தத்துவசுத்தி தெளிவுக்காட்சி ,,
ஆன்மரூபம் திரிபுக்காட்சி ,,
ஆன்மதரிசனம் ஐயக்காட்சி ,,
ஆன்மசுத்தி தெளிவுக்காட்சி ,,
சிவரூபம் திரிபுக்காட்சி 108
சிவதரிசனம் ஐயக்காட்சி ,,

# பரிசோதன பத்திரம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 6 | 15 | மர்ததியரை | மர்த்தியரை |
| 8 | 1 | கல்விதற்பித்து | கல்விகற்பித்து |
| ,, | 4 | நிவிர்ததி | நிவிர்த்தி |
| 61 | 8 | ஏனவும் | எனவும் |
| 71 | 10 | தேகநதோன்று | தேகந்தோன்று |
| 82 | 18 | துவையடுத் | வையடுத்து |
| 108 | 2 | விபரீதக்காட்சி | திரிபுக்காட்சி |

உ

சிவமயம்.

முதுகுன்றீசர் துணை.

# தசகாரிய விளக்கம்.

சைவசித்தாந்த சாத்திரங்களினுளவாகிய ஞான சாதனங்களுட் சிறந்ததும் பயனுமாகிய தசகாரிய ஆராய்ச்சியினைத் தனித்தெடுத்துக் கூறும் இந்நூல் இனிது முடிதற் பொருட்டுக் கடவுள் வணக்கம் முதற்கட் கூறப்படுகின்றது.

## காப்பு.

### விநாயகர் வணக்கம்.

[னென்னும்
சிந்தையு மொழியுஞ் செல்லாத் திறமைவீ டடைவா
புந்தியிற் போகத் தாசை புகுவதற் கேது வான
பந்தநீத் தன்பா லன்னூர் பரவிடப் பரமாய் நிற்கு
மெந்தையா முத்துவிக்கி னேசனை யிறைஞ்சு வாமே

## பழமலைநாதர் துதி.

அஞ்சவத்தை யுறும்பொதுவாஞ் சேர்க்கை தன்னை
யாசிரிய ரருளுமுப தேசத் தேநின்
றஞ்சலிலா நீத்தரனே டுடனும் பெற்றி
யாமெனத்தா னதுவாகி நிற்போர்க் கென்று
மஞ்சுதொழில் செய்பொதுவாம் பதியின் மேலா
யளப்பரிதாய்ச் சிவமாஞ்சித் சத்தாய் நிற்கு
மஞ்சுகவா ரிதிப்பெருக்கா முதுகுன் றீச
ரருட்கழல்க ளனுதினமும் பணிகு வோமே.

## பெரியநாயகிஅம்மை துதி.

அசைதலுறுஞ் சத்தியிலா விருப்பைக் காந்த
மசைப்பதுபோ லறிவுடைய வான்மாத் தம்மா
லசைதலில வாமியல்பை யறிந்தன் னோர்க
ளசைவுறச்செய் தவருள்ளு மறிவா னுன்னி
யசைவுறுவஞ் சப்பொருளை நீத்து மெய்யா
மசைவில்பொரு ளுடுபவ ருளத்தினூரு
மசைவெதிர்க ளறநிற்கும் பெரிய வம்மை
யடிகளையா மனுதினமும் போற்று வோமே.

## குருவணக்கம்.

நானெனும் பொருளி னுள்ளுறை மணியை
நாடியின் புறவறியாம
லூனினைக் கருதிக் கலங்கிடு வேற்கவ்
வுள்ளத்தை யுற்றுநோக் குதியென்
ருனவோர் மொழிதந் தருளினு லாண்ட
வண்ணலெம் மறுமுகத் தெந்தை
மோனசற் குருவா மந்திர மூர்த்தி
மொய்மலர்ப் பதந்தினம் பணிவாம்.

## நூற்பயன் முதலியன.

ஞான நன்னெறியாம் பத்துக் காரியத்தை
நல்லவர் நவின்றவம் முறையே
மோன வானந்த வாரிதி தன்னின்
முழுகி டாததவ ரநாடு
மானவென் போல் வார்படித்து ளத்திருத்தி
யநுட்டித்தற்கநு குணமாகத்
தேனெனுந் தமிழிற் கத்தியமாகச்
செப்பினன் தேசிகனருளால்.

## அவையடக்கம்.

அறிவுடை யார் தாம் பெற்ற வின்பந் தன்னை
யயலாரும் பெறவெண்ணி நூல்சொன் ஞர்க
ளறிவுமனு பவமுமிலா யானூல் சொல்ல
லறியாமை யெனக்குளதைக் காட்டு மேனு
மறிவுடையோர் பிறர்குற்றங் குறியா ரென்ற [னே
வதுகொண்டென் னறிவிற்றேன் றியவா சொன்
னறிவுடையான் றுடொழுதல் சொலுமொன்றே [கொண்,
டன்னவர்கொள் வாரெனவுந் துணிந்து மாதோ.

## நூல்.

# இலக்கண வியல்.

சைவசித்தாந்த சாத்திரங்களில் ஆன்மா முத்தி கூடுதற்குக் கூறும் நெறிகள் பலவற்றுள்ளும் தலைமை வாய்ந்ததும் முத்திப் பெரும் பயனாகியதும் தசகாரியமே. இவ்வாராய்ச்சியே இந்நூலின்கண் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதனை இலக்கணவியல், அநுபவவியல், காட்சியியல் என மூன்றியல்களாகக் கூறுவான் தொடங்கி தசகாரியவிலக்கணம் யாதோவென்னும் அவாய் நிலையை நிரப்புதற் பொருட்டு முதலாவது இலக்கண இயல் கூறப்படுகின்றது.

தசகாரியம் :— தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் எனப்பத்தாம்.

# க. தத்துவரூபம்.

இது ஆன்மா, தத்துவ ஆராய்ச்சி செய்யும் முறைமையினை உணர்த்துகின்றது.

ஒரு பாவையின் நடனத்தைக்கண்டவிடத்து அதன் தோற்றத்திற்கு மரம், கதை, வஸ்திரமாதியனவும், அதைச்செலுத்துவதற்கு உள்ளீடாகச் சூத்திரக் கயிறுமுதலியனவும், செலுத்துவிப்பதற்கு ஓர் புருடனும் வேண்டப்படுவது போலச், சரீரத் தோற்றத்திற்கும், அதைச் செலுத்துவதற்கும், செலுத்துவிப்பதற்கும் முறையே ஆன்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் வேண்டப்படுவனவாய், ஏனைத்தாத்துவிகங்களாகிய தூலசரீரம் போல் அழிவதின்றி முத்திபரியந்தம் இருத்தலால் அவற்றிற்குத் தத்துவங்களெனப் பெயராம்.

இப்பெயர் மரணமடைகிற மனிதராகியமர்த்தியரை அபேக்ஷித்து பஞ்சபூதலயத்துடன் நாசமா

கும் தேவரை அமர்த்தியர் என்றது போலவெனக் கொள்க.

இனி ரூபம்=இலக்கணம்; ஆகவே தத்துவங் களின் இலக்கணம் அறிதல், தத்துவரூபமெனப் பெயர் பெறும்.

அனாதிகேவலத்தில் ஆன்மா தன்னோடுடனாய் நிற்கும் முதல்வனை ஆணவமலத்தின் தடையினால் அறியாது அம்மலத்திற்கட்டுப்பட்டுவருந்தும். அவ் வருத்தத்திற்கு முதல்வன் இரங்கிக்குருடனுக்குக் கோல் கொடுப்பதுபோல், ஆன்மாவிற்கு மலநிவிர்த் தியின் பொருட்டுச்சரீரத்தைக்கொடுப்பான். அவ் வாறு சரீரத்தைக் கொடுக்காமலே மலநிவிர்த்தி செய்யக்கூடாதோவெனின் கூடாது. என்னை? மன் னவன் தன்புத்திரனுக்கு அரசுரிமையைக்கொடுக்க வேண்டுமென்றவிருப்பம் உடையவனாயினும், அவ் விருப்பத்தின்படி புத்திரன் பிறந்தநாளிலாவது, அல்லது சிறு பிராயத்திலாவது கொடுப்பதில்லை; கொடுத்தாலும் வகித்துக்கொள்ளும் ஆற்றல் அப் பொழுது புத்திரனுக்குண்டாகவுமாட்டாது; இத னையறிந்து புத்திரனுக்கு நெடுங்கணக்கு முதலாகக்

கல்விதற்பித்து அதனுலுண்டாகும் புத்திநுட்பத்தைத்தெரிந்து பின்னரே தனதாசுரிமைகளைக்கொடுப்பன். அதுபோல, ஆன்மாக்களுக்கு மலத்தை நிவிர்த்திசெய்து திருவடியைக்கொடுத்தலே சிவபெமானின் விருப்பமாயிருந்தாலும் அதற்குரியபக்குவமில்லுழிச்செய்யின் பயன்படாவாதலின் பக்குவம் வருவதற்கான முறைகளைச்செய்ய எண்ணி அம்முறைகளுள் முதலாவதாகத் தனுகரணுதிகளைக்கொடுப்பனென்க.

அங்ஙனமாயினும், முதல்வன் பக்ஷபாதமில்லாத பெருங்கருணையுடையவனுதலின், எல்லா ஆன்மாக்களுக்கும் ஒரேவிதமான சரீரத்தைக்கொடுக்காமல் பலவிதமான சரீரத்தைக்கொடுப்பானேனெனில், மலம் ஒருபொருளாய்ப்பலசத்திகளையுடையதாய்ப்பல ஆன்மாக்களையும் வேறுவேறு விதமாய் மறைத்தலின் அம்மறைப்புக்கேற்ப வேறு வேறு சரீரங்களைக் கொடுப்பான் என்க.

மலம்ஒன்றுபோலமறைக்கக்கூடாதோஎனின், அங்ஙனமாயின் மலம்ஒருசத்தியைஉடையதென்று

சொல்லவேண்டும்; அவ்வாறின்றிப்பலசத்திகளையு டையதென்பது சுருதிசம்மதமாதலால் மறைத்தலும் பலவாறாயிருப்பது அவசியமேயாம்.

இவ்வாறு மலத்தடையினால் மறைக்கப்பட்டிருக்கும் ஆன்மாக்களுக்கு அது நீங்குதற்பொருட்டுத் தனுகரணாதிகளைக்கொடுக்கமுதல்வன் தன்னோடுபிரிப்பின்றி நிற்கும் சத்தி சம்பந்தமாகச்சுத்தமாயையில் திருமேனிகொள்வன். திருமேனிகொள்ளாமலே தனுகரணாதிகளைக் கொடுக்கமுடியாதோவெனின் முடியாது. யாங்ஙனமெனில், அரசசத்திதன் ஆணையைச்செலுத்துவதற்கு அரசனென்னும் ஓர் வடிவத்தைக்கொள்ளுவது போல வென்க.

அங்ஙனம் கொள்ளும்வடிவம் நம்மனோர்வடிவம் போன்ற மாயாவடிவம் அன்று. நமக்கு ஒருவர் தரவேண்டுவதுபோல் அவருக்கு ஒருவர்கொடுக்கவேண்டுவதும் அன்று. சத்தி சங்கற்பமாத்திரையாய் நினைந்ததொருதிருமேனியைத்தானே எடுத்துக்கொள்வன். அற்றாயின், சத்தியோடு கூடிவடிவம் எடுத்துக்கொள்வான் என்றது, சுத்தமாயை

யினின்றும் திருமேனி கொள்வானெனக் கூறுவா னேனெனில் வடிவங்களெல்லாம் உண்டாவதற்கு முதற்காரணம் மாயையேயன்றிச்சித்தல்ல; எதனிடத்திலிருந்து எதுஉண்டாகவேண்டுமோ அது அவ்வாறுண்டாகுமல்லது, வேறுவிதமாய் உண்டாகுமாயின் இயற்கை விரோதமாமென்க.

## சிவதத்துவம்.

சிவபெருமான் இவ்வாறு திருமேனி கொள்ளுங்கால் சிற்சத்தியாகிய பராசத்தியானது, அரசசத்தி ஒன்றே உத்தியோக வேறுபாட்டால் பலவாயினாற்போல் உயிர்கட்கு மலத்தை நீக்கிச் சிவத்தை அளித்தற்கண் உளதாகிய கருணை என்னும் இச்சையும், அதற்குச்செய்யக்கடவதாகிய உபாயங்களை அறிவதாகிய ஞானமும், அறிந்தபோதவ்வாறு சங்கற்பித்துச் செய்வதான கிரியையுமாகிய மூன்று சத்திகளாய் அவற்றுள் ஞானமேயாய் வியாபரிக்கிற் சிவமெனவும், கிரியையேயாய் வியாபரிக்கிற் சத்தியெனவும், இரண்டும் ஒத்துவியாபரிக்கிற் சதாசிவமெனவும், கிரியை யேறிவியாபரிக்கில்மகேசுவர

மெனவும், ஞானமேமிவியாபரிக்கிற் சுத்த வித்தை யெனவும் பெயர் பெற்று நிற்பன். இவ்வைந்தும் இறைவனுக்குச் சுதந்தரவடிவமானதுபற்றிச் சிவ தத்துவமென்னும் பெயர் பெறும்.

தோற்றக்கேடுகளுடையனவாய தத்துவங்கள் இறைவனுக்குச் சுதந்தரவடிவமாமாறு யாங்ஙனமெனின், தோற்றக்கேடுகளுக்கேதுவாய காலதத்துவம் ஆண்டின்மையின் நித்தமாதலினென்க. நித்தமாயினும் கலையித்திரி யெனப்பெயர்பெற்றுக்காலத்தானமாய்நிற்கும் சிவசத்தியின் வியாபார பேதத்தால் முற்பிற்பாடு கூறப்பட்டது.

சுத்தசிவமானது இவ்வைந்து தத்துவங்களுள் சிவம் சத்தி என்ற இரண்டுதத்துவங்களை அதிட்டித்து நிற்கும்போது செய்யக்கடவதாகிய அறிவு மாத்திரையாய் நிற்கும் சமயம்பற்றி லயசிவனென்றும், சத்தர் என்றும், சதாக்கிய தத்துவத்தை அதிட்டித்து நிற்கும்போது, செய்யக்கடவதை யோசிக்கும் சமயம்பற்றிப்போகசிவனென்றும், உத்தியுத்தர் என்றும், ஈசுரம் சாதாக்கியம் என்

னும் இரண்டுதத்துவங்களை அதிட்டித்து நிற்கும் போது சங்கற்பித்துச் செய்யும் சமயம்பற்றி அதிகாரசிவனென்றும், பிரவிருத்தரென்றும் பெயர் பெற்று இம்மூன்றும் முறையே அருவம் அருவுருவம் உருவம் எனத் தடத்த லக்கணமாய்ப் பதியெனவும் பெயர் பெறும்.

### வித்தியாதத்துவம்.

இனிச்சிவபெருமான் ஆன்மாக்கள் தனுகரணாதிகளை யெடுத்துப் போகங்களைப் புசிப்பதற்கு அனந்தேசுரர்வாயிலாக அசுத்த மாயையினின்று காலதத்துவம், நியதிதத்துவம், கலாதத்துவம் ஆகிய மூன்றினையும் தருவர்.

காலதத்துவம்:— போகங்கள் புசிப்பதற்குப் பக்குவமாகும் ஏதுவினுல் செல்காலம், நிகழ்காலம், வருங்காலம் என மூன்றுதிறப்படும்-இந்தப்பேதம், சூரியகதியின் உபாதியாலுண்டாவதல்லது காலதத்துவத்திற்கு எதார்த்தமல்லவெனில் காலதத்துவமே இல்லையென்று கொள்ளவரும். சூரி

யகதி தினமாசாதிகளுக்குமட்டுமேயல்லது கணம் நொடி முதலியவைகளுக்கல்லவாதலின் காலதத்துவம் வேறே உண்டு. அத்தத்துவம் ஒன்றாயிராமல் மூன்றா யிருப்பானேனெனில், ஒன்றாயிருக்குமாயின் இன்னகாலத்தில் இன்னது ஆரும் இன்ன காலத்தில் இன்னது ஆகாதென்பது கூடாது. ஆனதால், மேற் சொல்லியவாறு காலம் மூன்றாயிருக்க வேண்டுமென்பது சித்தம். இந்தக்காலோற்பத்திக்குக் காலம் உண்டோ இல்லையோ? உண்டெனில் அனவத்தையாம்; இல்லையெனில் காலமே உண்டாகாது. ஆதலின், தத்துவதாத்துவிகங் களுக்கேதுவாய்க் காலாதீதரான ஈசுரன் சுவேச்சையினாலே காலதத்துவத்தை உண்டுபண்ணுவா. சுத்த மாயாபுவனவாசிகளுக்குச் சுத்தமாயையினும் இவ்வாறு சுத்தகாலதத்துவம் உண்டு,

<u>நியதிதத்துவம்</u>:— காலதத்துவத்திற்குப்பின்பு மாயையினின்றும் தோன்றிக்கருமபலத்தைப் பிறழாமல் அவரவர் கன்மம் அவரவரே நுகருமாறு வரையறை செய்துநிற்கும். ஈசுரசத்தியேவரையறு

பண்ணுதோவெனின், அது நின்மலையாகையினும் முத்தியையே கூடச்செய்யுமல்லது போகத்தைப் புசிக்கச்செய்யாது. கருமந்தானே நியமமாக பலத்தைக் கொடாதோ எனின், அது தொழிலாகையி னால் நியமனம் பண்ணமாட்டாது. ஆயின் ஒருவர் பண்ணின கிருஷியாதிபலன்களை அரசனுமிருக்க நியதிக்கு மாறாக மற்றொருவர் புசிக்கக்காண்பது எதனாலெனில், யாகஞ்செய்துவைக்கின்றவன் பண்ணினபலத்தைச் செய்வித்தவனாகிய எஜமானன் புசிப்பதுபோல, தொழில் செய்தவனுடைய பலத்தையேவினவன் புசிப்பன் என்க.

அவ்வாறு ஏவினவனும் ஏவல் செய்தவனுமன்றி, ஒருவன் தனதாகப்பண்ணினதை மற்றொருவன் புசிப்பக்காண்பானேனெனில், அதுவும் ஜன்மாந்திரசம்பந்தமன்றிவாராதென்க.

ஆதலால், ஈசுரசத்தியும், காலமும், கன்மமும் அன்றிநியதிதத்துவம் என்பது ஆன்மாக்களுடைய போகவரையறையின் பொருட்டு வேண்டப்படும்.

கலைதத்துவம்:—நியதி தத்துவத்திற்குப் பின் ஆன்மாக்களுக்கு ஆணவத்தின் மறைப்பைச்சிறிது நீக்கி அறியுந்தன்மையான எழுச்சியென்னும் கிரியாசத்தியை, ஏகதேசமாய் விளங்கப்பண்ணுவதாகிய கலாதத்துவம் மாயையினின்றும் உண்டாகும்.

சித்ரூபனுயிருக்கிற ஆன்மாவிற்குச் செயல்விளங்குதற் பொருட்டுக்கலாதத்துவம் வேண்டுமென்றால் மிகையாகாதோவெனின், அனாதியே ஆணவத்தினால் ஞானக்கிரியை தடுக்கப்பட்டிருத்தலால்ஆன்மஞானத்தினால் நீக்கக்கூடாத அவ்வாணவத்தைச் சிவசத்தியின் உபகாரமான கலையினால் சிறிது நீக்காதிருக்கில் விடயகிராகியம் இல்லாமல் கேவலமேயாய் விடுமாதலின் மிகையாகாதென்க. அங்ஙனமாயின், ஆணவமுழுதும் நீக்கப்படாதோவெனின், பாசிமூடிய குளத்தில் கல்விட்டெறிந்த பொழுது கல்விழுந்த இடமட்டுமே பாசிநீங்குவதுபோல இக்கலையினால் ஆணவநீக்கம் ஏகதேசமேயாமென்க. பாசியை வலைமுதலியனகொண்டு முற்றும் நீக்குவது

போலச்சிவஞானத்தினுல் ஆணவம் முற்றும்நீங்கும். ஆயினும், ஈசுரன் கலையை அதிட்டித்துக்கொண்டு ஆணவத்தைச்சிறிது நீக்காமல் தம்முடைய சத்தியினுலேதானே சிறிது நீக்கலாகாதோ வெனின், ஈசுரசத்திசம்பந்தத்தால் ஆணவம் முற்றும் நீங்கிவிடும். அச்சத்திபதிதற்கு மலபரிபாகம் வேண்டும். அவ்வாறுமலபரிபாகமின்றி ஆணவகேவலனுயிருக்கும்போது ஈசுரசத்தி சம்பந்திப்பதற்கு யோக்கியமல்லாமைகொண்டு நித்திரைபண்ணுகின்றமாணுக்கனைக்குருவானவர் தாம் நேரேபரிசியாமல் தண்டினுல் தட்டி எழுப்புதல்போல் ஈசுரனும் பரிக்கிரகசத்தியாகிற கலாதத்துவத்தினுலே ஆணவத்தைச் சிறிது நீக்குவாரென்க.

<u>வித்தியாதத்துவம்</u>:—இவ்வாறு ஆணவமறைப்பு ஏகதேசம் நீங்கி எழுச்சி ஏகதேசம் உண்டான ஆன்மாக்களுக்குவிடயதரிசனத்தைப்பண்ணுவிப்பதற்கு மேற்கூறிய கலாதத்துவத்தினின்றும் வித்தியா தத்துவம் தோன்றும். ஆன்மஞானமே விடயத்தை அறியாதோ வெனின், அது சுத்தசைதன்

ணியமாகையால் ஆன்மாவுடன் பிரிப்பின்றி இயற்கையாய் நிற்கும் சிவனை அறியுமல்லது செயற்கையான விடயத்தை அறியாது.

வித்தையென்னும் தத்துவத்தால் ஆன்மஞானமானது விடயத்தை அறியும் ஆதலால் கலையினலறியுந்தன்மையான எழுச்சியுடைய ஆன்மாவிற்கு அறிதற்குத்துணையாய் அதன்பின் வித்தியாதத்துவம் வேண்டப்படும். விடயதரிசனத்திலே புத்தி உதவியாகாதோவெனின், புத்தியும் ஆன்மாவினலே கிரகிக்கப்படுகையினுல் இப்புத்தியையும் கிரகிக்கிறதற்கு உதவிவித்தையே.

கிரமத்தில் நேத்திர வழியாகத் தரிசிக்கப்பட்ட விடயம் புத்தியினலே நிச்சயிக்கப்பட்டு வித்தையினலே புருடன் கிரகிப்பன். ஆனல் இந்த விடயத்தைக் கிரகிப்பதற்குப் புத்திவேண்டு மென்னும் வழக்கால் புத்தியே போது மெனின், பதார்த்த தரிசனத்தில் நேத்திரத்திற்குச் சூரியன் உதவிபோல விடய தரிசனத்தில் வித்தைக்குப்புத்தி உதவியேயாதலின் போதாதென்க.

அராகதத்துவம்:—இவ்வாறு கலாவித்தைகளினாலே எழுச்சியும் அறிவும் உடைய ஆன்மாவிற்கு விடயப்பிரவிர்த்தியின் பொருட்டு இச்சையைப் பண்ணுவதாகிய அராகதத்துவம் வித்தியா தத்துவத்தினின்றும் தோன்றும். ஆன்மா இச்சாஞானக் கிரியாவானதலின், அவ்விச்சைதானே போதாதோ அதைவிட அராகதத்துவம் என்று ஒன்று வேண்டுமோ வெனில், விருப்பில்லாத ஒருவனுக்குப் போகமில்லா திருக்கையினாலும், விருப்பமுடைய புருடனுக்கு அசுத்தமாயிருக்கிற போகங்களைப் புசிக்கையில் அமைவுபெறு திருக்கையினாலும், ஆன்மாவினிடத்திலிருக்கிற இச்சா சத்தி அவர்களிடத்திலிருந்தும் பயன்படாமையால் போகங்களைப் புசிப்பதற்கு உபகாரமாக அராகதத்துவம் வேண்டப் படுமென்க.

விடயசௌந்தரியத்தினாலேயே ஆன்மாவிற்குப் பிரவிர்த்தியுண்டாம் அராகம் வேண்டாமெனில், விடய சௌந்தரியமே அராகத்திற்குக் காரணமாயில், விடய நிவிர்த்தி பண்ணும் விரக்தனே இல்லையாய் முடியும்.

மோட்ச இச்சையும் அராகமானதால் அராகமற்றவனே இல்லையெனில், அராகம் அப்பியாச ரூபமென்றும் அறிவு ரூபமென்றும் இரண்டுவிதம்; அவற்றுள், அப்பியாச ரூபம் ஆன்ம ஞான சம்பந்மாயிருக்கும்; அறிவு ரூபம் விடய ஞான சம்பந்தமாயிருக்கும்; ஆணவதன்மமாகிய மோகாதிகளின் பரிபாகத்தில் விடய வைராக்கியம் வந்து விடயத்தியாகம் பண்ணவே அறிவு ரூபமான அராகம் போய், அப்பியாச ரூப அராகமிருக்கும். அஃது கண்களிருந்தும் உருவமுடைய பதார்த்தம் இல்லாதபொழுது அப்பிரயோசனமாவதுபோலும். இவ்வறிவு ரூபமான அராகம் போகவே, விடய சௌந்தரியங்களும் பதார்த்தங்களும் உண்டாயிருக்கவும் நேத்திரமில்லாத பொழுது கிரகிக்கப்படாததுபோல விடய கிராகியம் கூடாது. இவ்விடத்தில் பதார்த்த மில்லாத பொழுது கண்ணிருந்தும் கண்ணில்லாதபொழுது பதார்த்தமிருந்தும் பிரயோசனமில்லாததுபோல, விடயத்தியாகம் வந்தபொழுது அப்பியாச ரூபமான அராகம் இருந்தும் அறிவு ரூபமான அரா

கம் நீங்கிய பொழுது விடயமிருந்தும் பயனில்லையென்பது விளக்கப்பட்டது. அப்பொழுது அப்பியாசரூபமான அராகமும் இல்லாதவனென்று சொல்லலாகாதோ வெனின், அப்படியாயின் போகத்தில் இச்சையுடையவனு மல்லாமல் முத்தனுமல்லாமல் மோட்ச இச்சை யுடையவனென்ற அவத்தையு மில்லாமற் போகும். ஆனதால், அப்பியாசரூபமான அராகம் உண்டாயிருத்தலின் அராகத்தோடு கூடினவனென்று சொல்லுவோமெனின் இவ்வப்பியாச ரூப அராகமானது மோட்சத்திலே இச்சையை உண்டுபண்ணி மலசத்தியை நீக்கி நன்றாகச் சித்திபெற்றவர்களுக்கு (சாம் சித்தருக்கு) ஈசுரபாவனையினாலும், சாஸ்திர அப்பியாசிகளுக்குத்(வைநயிகருக்குத்) தீட்சையினாலும் சிவபாவனையினாலும் அராகத்தை அறவே நீங்கச்செய்து சிவராகத்தை உண்டுபண்ணி ஆணவமலத்தை அறவே நீக்கிச் சிவானந்தானு பூதியை உண்டுபண்ணுமாதலால் அராகத்தோடு கூடினவனென்று சொல்லலாகாதென்க.

கலையும் வித்தையும் அராசமும் சடமாயிருக்கக் கலைகிரியையை யெழுப்புமென்றும் வித்தை விஷயத்தை அறிவிக்குமென்றும் அராகம் விஷய இச்சையைப் பண்ணுவிக்குமென்றும் கூறியது எவ்வாறு பொருந்துமெனின், ஈஸ்வரனது சத்தி இந்தத் தத்துவங்களை அதிட்டித்து நின்று செய்யுமாதலால் கட்டிலிருக்கும் புருடன் சப்தித்ததைக் கட்டில் சப்தித்தது என்பதுபோல ஆகுபெயரால் பொருந்துமென்க.

<u>புருடதத்துவம்</u>:— இவ்வாறு கலைமுதலிய மூன்றும் தொழில் அறிவு இச்சைமுதலிய மூன்றனையும் விளக்கிய விடத்துக்கன்மத்தை வரையறுத்தலும் நியமித்தலும்செய்துஉபகரிப்பனவாய காலநியதிகளுடன் ஐந்து தத்துவங்களோடுங்கூடி ஆன்மாபோகத்தில் உன்முகமாய் நிற்கும்போது புருடதத்துவமுண்டாம். ஆன்மாவுக்கே புருடனென்னும் நாமமல்லது புருடதத்துவமென வேறொன்றில்லையெனில், தத்துவம் முப்பத்தாறென்னும் தொகையுங்கூடாது; புருடதத்துவ சோதனையும்

இல்லையாம்; பஞ்சகஞ்சுகஸ்தானமாய் இந்தப்புருட தத்துவம் ஒன்று ஆன்மாவைப்பற்றி யேகதேசப்படுத்திக்கொண்டு சஞ்சரியாதபோது போக்கு வரத்தும் கூடாது; ஆதலால், ஆன்மாவுக்கு வேறாகப் புருட தத்துவம் வேண்டப்படுவதுபற்றி உண்டென்க.

மேற்சொல்லிய ஐந்தும், புருடதத்துவமும், காலமுதலிய மூன்றுதத்துவங்கள் தோன்றுவதற்கு ஆதாரமாயிருந்த அசுத்தமாயையிற் கலக்குண்ட பாகமாகிய மாயையும், ஆக ஏழு தத்துவங்களும் ஆன்மாக்களின், அறிவு, செயல், இச்சைகளால் அதிட்டித்து நிற்றற்கு உரிமையுடைமையின் வித்தியாதத்துவமெனப் பெயர் பெறும். முன்னர்க் கூறப்படும் பிரகிருதிதத்துவத்தைச் சேர்த்து மாயையை நீக்கி வித்தியாதத்துவம் ஏழென்று கூறுவாருமுளர்.

## ஆன்மதத்துவம்.

மேற் கூறிய கலையினின்றும் சிவபெருமான் ஸ்ரீகண்டபரமேசுவரன் வாயிலாக மூலப்பிரகிருதி

யென்னும் தத்துவத்தைத் தோற்றுவிப்பர். இம் மூலப்பிரகிருதி சாத்துவித இராசத தாமதங்க ளென்னும் மூன்று குணங்களுடனே கூடியிருக் கும். இம்முக்குணங்களும் ஒன்று மேற்பட்டு நிற்கும் போது மற்றவை அடங்கி நிற்கும்முறை போலல்லாமல் ஒத்து அடங்கி நிற்கும். இக்கு ணங்கள் வெளிப்பட்டுத் தோன்றுமையினல் இக் குணங்களோடு கூடிய பிரகிருதிக்கு அவ்வியத்த மென்னும் பெயருண்டு. இக்குணங்களைப் பிரமா, விஷ்ணு, காலருத்திரர் அதிட்டித்து நின்றுசிருஷ் டிதிதி சங்காரங்களைப் பண்ணுவர். இக்குணங் களை ஆன்மாக்கள்பொருந்திச்சாந்தம், பிரவிருத்தி, மோகங்களையடைவர். இப்பிரகிருதி யினின்றும், ஆன்மா போகங்களைப் புசிப்பதற்கு வேண்டும் தத்துவங்கள் தோன்றும். அவை வருமாறு:—

புத்திதத்துவம்:— பிரகிருதியினின்று விபரீத வுணர்வுடைய அவிச்சை தோன்றி அதன் பின் புசிக்கத்தக்க விடயங்களை நிச்சயிப்பதாகிய புத்தி தத்துவம் தோன்றும். இந்தப் புத்திகிரியை

யென்று சொல்லும் கலைக்கும் ஞானமென்று சொல்லும் வித்தைக்கும் நடுவே நின்று கலைகொடுத்த (எழுச்சியாலுண்டான) விடயங்களைத்தான் கவர்ந்து வித்தையினிடத்துக் கொடுத்து இவற்றை ஆசிரயித்துக் கொண்டிருக்கும்.

அகங்காரதத்துவம்:—இந்தப் புத்திதத்துவத்தினின்றும் அகங்காரதத்துவந் தோன்றி யானென்றும் பிறரென்றும் என்னுடையதென்றும் பிறருடையதென்றும் என்னோடொப்பாரில்லை யென்றும் ஒருப்பட்டெழுந்து இந்திரியக் காட்சிக்கு விடயமாய் நிருவிசற்பமாய்த் தோன்றியதொன்றனை இலனதென்று புத்திதத்துவம் நிச்சயிக்கும்படி ஆன்மாவுடன் வேற்றுமையின்றி நிற்கும். இவ்வகங்காரம் சாத்துவிதம், இராசதம், தாமதமென்னும் குண வேற்றுமையினால் தைசசாகங்காரம் வைகாரிகாகங்காரம், பூதாதிகாகங்காரம் எனமுத்திறப்படும்.

மனம்:— தைசசாகங்காரத்தில்சங்கற்பவிகற்பம் செய்துகொண்டு சம்சயரூபமாய் நிற்கும்

மனம் தோன்றும். புத்தி அகங்காரங்களென இரண்டு தத்துவங்களிருக்க மனம் என்றொரு தத்துவம் வேண்டுமோ வெனின், புத்தி நிச்சயத்தையும் அகங்காரம் அபிமானத்தையும் உண்டுபண்ணுவதல்லது சங்கற்ப விகற்பத்தை உண்டுபண்ணுதாதலால் அவற்றை உண்டுபண்ணுவதற்கு மனம் வேண்டு மென்க.

சித்தம்:—அதன் பின் எதிரிட்டதொரு விடயத்தைப்பற்றி நிருவிகற்பமாய்ச் சிந்திக்கும் சித்தம் தோன்றும்.

ஞானேந்திரியம்:— அத்தைசசாகங்காரத்தினின்றும் சித்தம் தோன்றியபின் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்துந் தோன்றும்.

கர்மேந்திரியம்:— வைகாரிகாகங்காரத்தினின்றும் வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்னும் ஐந்துந் தோன்றும்.

தன்மாத்திரை:—பூதாதிகாகங்காரத்தினின்றும் சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம் என்னும்

ஐந்துந் தோன்றும். இத்தன்மாத்திரைகள் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களை அதனதன் விடயங்களில் விடயிக்குமாறு ஊக்கஞ் செய்வித்து உடனிற்கும்.

புரியட்டக சரீரம்:—இத்தன்மாத்திரைகள் ஐந்தும் மனம், புத்தி, அகங்கார மூன்றும் ஆக எட்டும் புரியட்டகவுடம்பாம். விடய வடிவாகிய சப்தாதிகள் வேறு. தன்மாத்திரை வடிவினதாகிய சப்தாதிகள் வேறு. விடய வடிவாகிய சப்தாதிகள் போக ரூபமாயிருக்கும். தன்மாத்திரை வடிவினதாகிய சப்தாதிகள் போக ரூபமாயிருக்கும்

பஞ்சபூதம்.—பஞ்ச தன்மாத்திரையாகிய சப்த பரிச ரூபரசகந்தங்களினின்று முறையே ஆகாசம், வாயு, அக்கினி, அப்பு, பிருதிவி என்னும் தூலபூதங்களைந்துந் தோன்றும்.

ஆகாயம்:—ஓசையைக்குணமாய் உடையதாய் அரூபமாய் வாயுவாதிநான்கு பூதங்களுக்கும் இடங்கொடுத்து நிற்பதாயிருக்கும். இதன் குணமான சப்தம் சுரோத்திரேந்திரியத்தினால் அறியத்தக்கது.

வாயு:—ஆகாசத்தைச்சேர்ந்து தோன்றிச்சக சகவென்னும் சப்தத்தையும் உஷ்ண சீதமல்லாத பரிசகுண விசேடத்தையும் உடையதாயிருக்கும். இதன் குணமான பரிசம் துவக்கு இந்திரியத்தினால் அறியத்தக்கது.

அக்கினி:—வாயுவைச்சேர்ந்து தோன்றித்தக தகவென்னும் சப்தமும் உஷ்ணபரிசமும் ரூபகுணமும் உடையதாயிருக்கும். இதன் குணமாகியரூபம் சக்ஷு இந்திரியததினலறியத்தக்கது.

அப்பு:—அக்கினியைச்சேர்ந்து தோன்றிச்சல சலவென்னும் சப்தமும் சீதபரிசமும்வெண்மைரூபமும் மதுரரசகுணமும் உடையதாயிருக்கும். இதன்குணமாகிய இரசம், சிங்குவை இந்திரியத்தினல் அறியத்தக்கது.

பிருதிவி:—அப்புவைச்சேர்ந்து தோன்றிக்கடக டவென்னும் சப்தமும், உஷ்ணசீதபரிசமும், வெண்மையாதி ரூபமும், மதுராதிரசமும், கந்தகுணமும் உடையதாயிருக்கும். இதன்குணமானகந்தம் ஆக்கிராண இந்திரியத்தினல் அறியத்தக்கது.

இவ்வாறு பஞ்சதன் மாத்திரையில் பஞ்சபூதங்களுந்தோன்றும். இஃதன்றி ஆகாயத்தில் வாயுவும், வாயுவில் அக்கினியும், அக்கினியில் அப்புவும், அப்புவில் பிருதிவியும் தோன்றுமென்பர் ஒருசாரார். அவ்வாறாயின், காரியத்திலுள்ளது காரணத்தில் இருக்கவேண்டுமென்பது முறைமையாதலின் நான்குபூதங்களும் தோன்றுவதற்கு ஆதாரமான ஆகாயத்தில் ஐந்துகுணம் இல்லாமையும் அவ்வாறே மற்றைப்பூதங்களிலும் கீழ்ப்பூதங்களில் உள்ளகுணம் மேற்பூதங்களில் இல்லாமையும் உண்மையாதலின் அதுபொருந்தாவாம். பஞ்சதன்மாத்திரைகளே மேற்கூறியவாறு பஞ்சபூதங்களையும் தோற்றுவிக்கும்.

அங்ஙனமாயின், வேதங்களில் ஆன்மாவில் ஆகாசந்தோன்றி ஆகாசத்தில் வாயுவாதி பூதங்கள் ஒன்றில் ஒன்றாய்த்தோன்றும் என்றதின்கருத்தென்னையோவெனின், தன்மாத்திரைகள் ஒன்றையொன்று சேர்ந்துபூதங்களைத் தோற்றுவிக்கும் முறைமையினாலும் ஆகாசமுதலாக ஒன்றன்பின்

ஒன்று உண்டாங்கிரமத்தினாலும் பஞ்சீகரணத்தினாலும் அவ்வாறு கூறிபதாமென்க.

பஞ்சீகரணம்:—ஒருபூதத்தை இரண்டுபங்காக்கி ஒருபாதி அந்தப்பூதமாகவேயிருக்க நின்றபாதி ஒவ்வொன்றும் நாலுகூறாகி ஒவ்வொரு நாலுகூறும் தன்னம்சமாகியபாதிப்பாகம் நீங்க ஏனைய நான்கு பூதங்களினும் வியாபித்து நிற்பது. தாத்துவிகங்களாகிய அறுபதுதத்துவங்களும் இப்பஞ்சீகரண பூதங்களினின்றும் தோன்றும்.

மேற்கூறிய அந்தக்கரணங்களநான்கு, ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, தன்மாத்திரை ஐந்து, பூதம் ஐந்து ஆகத்தத்துவம் இருபத்துநான்கும் ஆன்மா அதிட்டித்துநின்று செலுத்தும் தன்மையினால் ஆன்மதத்துவமெனப்பெயர் பெறும்.

அசுத்தமாயையினின்றும் தத்துவங்கள் உண்டாகுமென்றுசொல்லியிருக்க, இங்கே தன்மாத்திரைகளிலே பூதங்களும், வைகாரிகாகங்காரத்தில் கன்மேந்திரியங்களும், தைசசாகாங்காரத்தில் ஞா

னேந்திரியங்களும் மனமும் சித்தமும், புத்தியில் அகங்காரமும், பிரகிருதியில் புத்தியும், கலையில் பிரகிருதியும் வித்தையும், வித்தையில் அராகமும், மாயையில் காலம் நியதிகலை மூன்றும், கலைமுதலான ஐந்தினுடைய சமுகத்தில் புருடதத்துவமும் தோன்று மென்று சொன்னது என்னையோவெனின், ஒருவித்திலேமரமுண்டாக அம்மரத்தின் அவஸ்தாபேதத்தினல் வித்தில் முளையும், முளையில் மரமும், மரத்தில் கொம்பும், கொம்பில்பல இலையும் பூவும், பூவில் காயும் உண்டாயிற்றென்று சொல்வதுபோலென்க.

இதுகாறும் கூறிப்போந்த தத்துவம் முப்பத்தாறுள் சிவதத்துவம் ஐந்தும் சிவத்திற்குச் சுதந்தரவடிவாதலின் சைதன்ய மென்னப்படும். புருடதத்துவம் ஒன்று சடமாயிருந்தும் ஆன்மாவுடன் நீங்காமல் நிற்பதாகையால் சார்ந்ததன் வண்ணமாய் சித்தசித்து என்று சொல்லப்படும். ஏனைமுப்பது தத்துவங்களும் அசித்து என்று சொல்லப்படும்.

இதனை

" சுத்த தத்துவங்களென்று முன்னமே சொன்ன வைந்து
மித்தகைமையினியம்பு மிவை முப்பத்தொன்றுமாகத்
தத்துவ முப்பத்தாறுஞ் சைதன்னியங்களேந்து
சித்தசித்தான்மா வொன்று முப்பது மசித்தே செப்பில்"

என்னும் சிவஞான சித்தித்திருவாக்கானுமுணர்க.

பஞ்சசரீரம்:-தாத்துவீகங்கள் தூலசரீரம். ஆன்மதத்துவங்கள் இருபத்து நான்கும் சூக்குமசரீரம். பிரகிருதி குணசரீரம். காலமுதல் ஐந்தும் கஞ்சுக சரீரம். அசுத்தமாயையிற் கலக்குண்ட பாகமாகிய வித்தியாதத்துவத்தில் வைத்து எண்ணப்படும்மாயைபர (காரண) சரீரம். இவ்வாறு ஆன்மாவிற்கு ஐந்து சரீரம் கொள்ளப்படும்.

மேற்கூறிய முப்பத்தாறு தத்துவங்களுள் ஞானேந்திரியம் ரு கன்மேந்திரியம் ரு தன்மாத்திரை ரு பூதம் ரு ஆக இருபதும் தனுவாகவும், அந்தக் கரணம் சும் உதவிசெய்து நிற்றலால் கரணமாகவும் ஆக இருபத்து நான்கும் அவற்றின் செயலும்

வெளிப்பூத விடயங்களாகிய புவனமும் ஆன்மாவுக்கு விடயத்தைப் புசிப்பதற்கண் வேண்டப்படுவது பற்றிப் போக்கிய காண்டமென்றும், வித்தியா தத்துவம் விடயத்தை அறிவதற்கண் வேண்டப்படுவதுபற்றிப் போககாண்டமென்றும், சிவதத்துவம் விடயத்தில் செலுத்துவிப்பதற்கண் வேண்டப்படுவதுபற்றிப் பிரேரக காண்ட மென்றும் பேர் பெற்று முறையே பாவையும், கயிறும், சூத்திரீகனும் போலவிளங்கும். இவ்வாறு தத்துவங்களின் இலக்கணங்காண்டல் தத்துவரூபம்.

## உ. தத்துவ தரிசனம்.

இது மேல்தத்துவ ஆராய்ச்சி செய்த ஆன்மா அவற்றைத்தான் அல்லவென்று தரிசிக்கும் முறைமையினை உணர்த்துவது.

சிவதத்துவம் ஐந்தும் சுத்தமாயாகாரியமாதலானும் ஏனைத்தத்துவ முப்பத்தொன்றும் அசுத்தமாயாகாரியமாதலானும் இத்தத்துவங்கள் உயிரைக்

கூடியன்றித் தனித்துநின்று தொழிற்படுந்தன்மை இன்மையானும் சடப்பொருளென்றும் தன்னால் அறியப்படுவதென்றும் தானல்லவென்றும் காண்டல் தத்துவதரிசனம்.

அசுத்தமாயாகாரியங்களாகிய தத்துவங்களைச் சடமென்றும் தன்னால் அறியப்படுவதென்றும் காண்டல் கூடும். சுத்தமாயாகாரியங்களாகிய சிவ தத்துவங்களை அவ்வாறு காண்டல் எவ்வாறு கூடுமெனின், "அறிபொருள் அசித்தாய் வேறும்" என்ற சிவஞானசித்தித்திருப்பாசுரப்படி அத்தத்துவம் ஐந்தும் சிவபெருமானால் அதிட்டிக்கப்பட்டன்றி விளங்காதாதலின் சடமென்றும் அறிந்தாங்கறியும் பரம்பொருள் சுட்டியறிதலின்மையின் அத்தத்துவம் ஐந்தனையும் இத்தன்மைத்தெனச்செலுத்துவிக்கும் உரிமைபற்றி ஆன்மாவே உணருந் தன்மைத்தாதலின் தன்னால் அறியப்படுவதென்றும் காண்டல் கூடுமென்க.

## ௫. தத்துவ சுத்தி.

இது மேல் தத்துவதரிசனஞ் செய்த ஆன்மா அவற்றை நீக்கும் முறைமையினை உணர்த்துவது.

முப்பத்தாறு தத்துவங்களும் சடப்பொருளென்றும் தன்னால் அறியப்படுவதென்றும் ஆராய்ச்சி அறிவாற்கண்ட ஆன்மா, அவ்வாறு காணினும் அநுபவ அறிவால் அத்தத்துவங்களில் யான் எனதென்பதறத்தன்னால் நீக்க இயலாமையின் ஞான சற்குருவை அடுத்துமாணாக்கனுரிமையிற்றொண்டு செய்து நீக்குமாறு யாங்ஙன மென்று வினவுவன். ஆசிரியர் அருளால் உணர்த்தக்கானலை நீரென்று வேட்கையுற்றுச் சென்ற ஒருவன் விசாரித் தறிந்த விடத்து அதனை விரும்பாதது போல இத்தத்துவக் கூட்டங்களாலாய தனுகரணாதிகளை யான் எனதெனக் கருதி நின்ற மயக்கம் நீங்கும். நீங்கவே, அவற்றைப் பற்றிச்செல்லும் போதம் ஒழியும். ஒழியவே, சொப்பனத்தில் யானையேறி மாலை சூடக் கண்டானொருவன் விழித்தவிடத்து அதனைப் பொய்யாய்க் காண்பது போல் இத்தத்துவங்கள் யாவும் அறியாமையினால் இதுகாறும் அறிவுடைப் பொருள் போல் தோன்றிற்றே யன்றி உண்மையில் அறிவில்லாதசடமே என்றும் கனவில் கண்டகாட்சிக்குத் தானேமுதலா இருந்ததுபோல்

இத்தத்துவங்கள் அறிவுடைப் பொருள்போல் தோன்றுவதற்கு அறிவு சொரூபமாகிய நமது செயற்கையே எதுவென்றுங் கண்டு அவற்றினின்றும் விடுதலை யெய்தும். எய்தவே, அறிவாயும் தத்துவங்கள் போல் தோன்றி மறைதலில்லாத நித்தியமாயும் அவற்றிற்கு அந்நியமாயும் நிறைவாயுமுள்ள தன் தன்மையை ஆன்மா அறிந்து நிற்கும். இதுவே தத்துவ சுத்தியாம்.

ஆன்மாவின் தன்மை உணர்த்துதலாகிய இதற்குத்தத்துவ சுத்தியென்னும்பெயர் எவ்வாறுபொருந்துமெனின், சுத்தியென்பது அழுக்கு நீக்கம். தத்துவங்கட்கு இல்லாத அறிவை அவற்றிற்கு உண்டெனக்காண்டலே அழுக்கு. அங்ஙனம் காண்டல் ஆன்மாவேயன்றித் தத்துவமன்று. அவ்வழுக்கு இருத்தற்குரிய இடம் தத்துவமாதலின் அதனை அதனிடத்தில்லாது காணவேண்டுவது காரணமாய் ஆன்மாவை உணர்த்தினும் அழுக்கு நீக்கத்திற்கு முன்னிலையாய் உள்ளது தத்துவமே ஆதலிற் பொருந்து மென்க.

# ௪. ஆன்மரூபம்.

இது ஆன்மாதன்தன்மை உணரும் முறைமையினை உணர்த்துவது.

தத்துவங்கள் சடமாதலினாலும் சிவம் சுட்டியறிதலில்லாமையானும் ஒன்றனை யொன்றறியாதாதலின் இவ்விரண்டிற்கும் வேறாய்த் தத்துவங்களைச்சுட்டியும் சிவபெருமானைச் சுட்டிறந்தும் நின்றறிவது ஆன்மாவாம்.

இவ்வான்மா, குரு கிருபையால் தத்துவங்களைச் சடமென்றுகாணவொட்டாமல் மறைத்து நின்ற ஆணவமலத்தினின்றும் நீங்கித் தத்துவங்களைச்சடமென்றும் தன்னை யறிவுடைப்பொருளென்றுங்கண்டு தத்துவங்களைத்தானறியும் முறைமையினையும் அங்ஙனம் அறியப்பட்டதானும் மறந்தும் நினைத்தும் வருதலால் ஒருபெற்றித்தாய் அறியும் சுதந்தரம் தனக்கில்லையென்றும் அங்ஙனமாகவே ஒருபெற்றித்தாயறியும் இறைவன் ஒருவன்

உளன் அவனே கன்மத்துக்கீடாக நம்மறிவுக்கறி வாய் நின்றுணர்த்துவனென்னும் முறைமையினை யும் தன்னறிவிலே விளங்கக்காண்டல் ஆன்மரூபம்.

அங்ஙனமாயின், ஆணவமல நீக்கம் இங்ஙனேகாண்டலின் இதுவே முத்தியென்றும் அது குறித்து மேற்செய்ய வேண்டியதொன்றில்லை யென்றும் பெறப்படுமாலோவெனின், அற்றன்று. என்னை? இருளொன்றே கண்ணினிடத்துள்ள அறிதற்றொழிலையும் விடய விளக்கத்தையும் மறைக்கும். அங்ஙனம் மறைக்குங்கால் ஒளியின் உபகாரத்தால் பொருளினிடத்துள்ள இருள் நீங்கிப் பொருள் விளங்கினும் கண்ணினிடத்துள்ள இருள் நீங்காதபோது பொருள்காட்சிப்படுமாறில்லை. ஒளியின் உபகாரத்தால் அவ்விருளையும் நீக்குங்கால் பொருள்காட்சிப்படும். இதுபோல ஆணவமலம் ஒன்றே ஆன்மாவிற்குச் சடசித்துக்களின் வேறுபாடுகள் அறிய வொட்டாமலும் முதல்வனோடு உடனாய்நிற்கும் தன் தன்மையினை அறியவொட்டாமலும் மறைக்கும். அவற்றுள், சடசித்

துக்களின் வேறுபாடறிதல் நிகழவொட்டாது மறைத்த மலசத்தியின் நீக்கமே ஈண்டுக் கூறியதாமாதலின் இவ்வாராய்ச்சி ஞானத்தால் முதல்வனோடுடனாய் நிற்கும் அனுபவ ஞானம் தோன்றுது. அது தோன்றுதற்பொருட்டு ஞானகுருவை அடுத்துச் செய்யக்கடவதுண்டென்க.

இறைவன் உண்மையும் புலப்படுத்துவதாய இதற்கு ஆன்மரூபம் என்பது எவ்வாறு பொருந்துமெனின் இறைவனும் ஆன்மாவும் பிரிப்பின்றி நிற்கை உண்மையாதலினாலும் அவனையின்றி அமைந்தென்றை அறியா இயல்பினனுதலானும் அங்ஙனம் கூறுதல் பொருந்துமென்க.

## ரு. ஆன்மதரிசனம்.

இது மேல் தன்தன்மையினை உணர்ந்த ஆன்மா சிந்தனையால் சிவனையின்றித் தனக்குச் செயலில்லையென்று தரிசிக்கும் முறைமையினை உணர்த்துவது.

ஆன்மா, தன்னுடைய ஞானத்தால் ஒன்றை அறியுந்தன்மையும் அனுபவிக்கும் தன்மையும் சுதந்தரமாயின்றாயினும் யாவையும தானே அறிந்து புசிப்பவனெனக்கருதிப் புசியாநிற்பன். குருகிருபையால் உண்டாம் சிவபெருமான் திருவருளால் அவனருள் அறிவித்தாலன்றி நமக்கறியுந் தன்மை இன்றெனக் கண்டு தன்னறிவென எவ்விடத்தும் முனைத்துத் தோன்றாமல் தத்துவங்களை என்னுடைய தென்றும் அவற்றை விரும்பி வெறுத்து நின்ற சீவ அறிவை யானென்றுங்கொண்டிருந்த அசத்திய போதம் நீங்கி அவற்றைச் சுட்டியுணரும் சிற்றறிவும் நீங்கி நிலைபெற்ற பொருளாய் அறிவித்தும் செய்வித்தும் அறிந்தும்செய்தும் நிற்பது திருவருளே எனவறிந்து அவ்வாறறிந்து நின்ற தன்மையும் நீங்கி நிற்றல் ஆன்மதரிசனமாம்.

## சூ. ஆன்மசுத்தி.

இதுமேல் தன்னைத் தரிசித்த ஆன்மாசிவபெருமானுடைய வியாபகத்துள் அடங்கி நிற்கும் முறைமையினை உணர்த்துவது.

சிவனருளையின்றித்தானாக ஒன்றனை அறியவும் செய்யவும் இயலாத ஆன்மா ஒன்றனைச்சுட்டி அறிவதானதன்னறிவு எவ்விடத்தும் தோன்றாமற் செய்து தன் செய்தியெல்லாம் அருளின் செய்தியேயாய் அதனுளடங்கி நிற்கவேண்டும். அங்ஙனம் நிற்குங்கால், பேய்கொண்டானொருவன் பேயாய் நின்றாற்போலச்சிவமேயாய் நிற்பன். நிற்கவே, யாவற்றையும் அறிகின்ற இறைவனுடைய ஞானம்தன்னிடத்துப் பொருந்துதலால் யாவும் தன்னிடத்து நிகழக்காணவேண்டும் அதுவன்றிப் பஞ்சகிருத்தியமும் தானே நடத்தவேண்டுமென்றுண்டாகும் போத எழுச்சியும் நீங்கும். நீங்கவே, தன்னை அவ்வருள் அடக்கிநின்றமுறைமையும் அவ்வருளில் தானடங்கிநின்றமுறைமையுந் தோன்றாமல் அஞ்ஞானத்தால் தானே தேகமாகியும் தேகமேதானாகியும் நின்றதுபோல் பதிஞானத்தால் சிவமேதானாயும் தானே சிவமாயும் நீக்கமற நிறைந்து நிற்கும் அருட்காட்சிதோன்ற நிற்பன். இதுவே ஆன்மசுத்தியாம்.

இது ஆன்மாவினிடத்துத்தனக்குரிமையில்லா தசுதந்தரஅறிவு உண்டெனக்காணுவதாய அழு

க்கு நீங்குதலால் ஆன்மசுத்தியென்னும் பேரா யிற்று.

∴ இதனுள் சிவதரிசனம் கூறுவதின்கருத்து மேலைத்தத்துவசுத்திக்குக் கூறியவாறுபற்றி உணர்ந்துகொள்க. முன்னர் அநுபவ இயலிலும் விளக்கிக்காட்டப்படும், ஆண்டும்காண்க.

## எ. சிவரூபம்.

இது சிவபெருமானுடைய உருவத்திருமேனியாகிய ஞானகுருவினுடைய தரிசனம் பண்ணும் முறைமையினை உணர்த்துவது.

மகிமைதீங்கிய இரக்கம் என்னும் சத்தியே தனக்குத் திருமேனியாகச்சடசித்துக்களாய தாவர சங்கமங்களுள் பிரிப்பின்றிநிற்கும் இறைவன்சகசமாயுள்ள ஆணவமலத்தில் கட்டுப்பட்டிருக்கும் ஆன்மாக்களின் மலநிவிர்த்தி நிமித்தமாய் சுத்தாசுத்தமாயாதத்துவங்களினால் சிருட்டித்தும், திதித்தும், சங்கரித்தும், மலபரிபாகம் வரப்பண்ணுவன்.

பரிபாகம் வரவே, தத்துவங்கள்யாவும் வேறாகக் காணுமாறு தமதருட்சத்தியைப்பதிப்பிப்பன்.

பதியவே, அச்சத்திநிபாதமுடையாருக்குஇது காறும் உண்ணின்றுணர்த்திய அப்பரம்பொருளே முன்னின்றுணர்த்த குருவடிவாய் மாநுடச்சட்டை தாங்கி எழுந்தருளிவரும். வந்து தான் வேறறநின்றமுறைமையினை உபதேசமுகத்தால் விளக்குவன். விளக்கவே, அங்ஙனம் விளக்குபவன் சிவபரம்பொருளேஎன்று தன்னுள்ளத்திற்கண் சந்தேகவிபரீத மறஅறிவன். இங்ஙனம் சிவமே திருமேனிகொண்டதென அறிவது சிவரூபமாம்.

சந்தேக விபரீத மற அறியும் முறைமை எவ்வாறெனின், தன்னுள்ளத்தின்கணுள்ள மலபரிபாகத்தண்மையை உணர்ந்துபதேசிக்கும் உறுதியினாலும் பொய்ப்பொருளில் தோயாது சுத்தான்மசைதந்நியமே தனக்குச்சொரூபமாய்க்கொண்டு நின்றாலன்றி அங்ஙனமறிந்து அநுக்கிரகிக்க இயலாதென்றும் ஏதுவினாலும் தாயினிடத்துண்டாம் அன்புருவாகிய முலைப்பாலும் கண்ணீரும் குழவியைக்

காணு முன் இல்லாதாய்க் கண்டபின் வெளிப்பட்டுத்தோன்றுமாறுபோல் நம்மாட்டுவைத்த இறைவனிடத்துள்ள அன்பேநம்மைக்கண்டவிடத்து இக்குருவடிவாய்த் தோன்றிற்றென்னும் திருட்டாந்தத்தினலும் சிவபெருமான் திருமேனியெனக் காண்பதென்க.

சரம் அசரமாகிய பொருள்கள் எல்லாவற்றுள்ளும் இறைவன் அந்தரியாமியாய் வியாபித்து நிற்பனுதலின் எப்பொருள்களையும் சிவமேயெனக் காண்டலும் சிவரூபமாம்.

ஆசிரியனைக்கண்ட விடத்தும் எப்பொருளும் இறைவனெனக் கண்டவிடத்தும் உண்டாவது போதமுனைப்பறுதலேயாதலின், இரண்டும் கருத்துவகையால் ஒரு பொருளேயாம்.

அற்றுயின், மனுடச் சட்டைதாங்கிய ஏனைக் குரவரைக் காண்டலும் சிவரூபமாமாலோவெனின், அற்றன்று. என்னை? உயிர்கள்தோறும் விரவிநிற்கும் இறைவனியல்பு அதிட்டானமென்றும்ஆவேசமென்றும் இருதிறப்படும்.

அவற்றுள், பெத்தான்மாக்களிடத்து மறைந்து நிற்பது அதிட்டானமும், முத்தான்மாக்களிடத்து விளங்கிநிற்பது ஆவேசமுமாம். ஞானகுருவல்லாத ஏனைக்குருவினிடத்து இறைவன் மறைந்துநிற்றலால் அவர்தரிசனம் சிவரூபமாகாதென்க.

சிலநூல்களில் ஞானாதிகாரிகளுக்குக்குருமூர்த்தி ஆதாரத்தை அதிட்டித்துநின்றுணர்த்துமென்றதின்கருத்தென்னையோவெனின், சுத்தான்மசைதந்நியமே சொரூபமாகிய முத்தரிடத்து நிற்கும் இறைவனது ஆவேசபக்கமும் பொருட்டன்மையால் தானேயாமென்பது பற்றி அதிட்டானமென்றும் கலப்பின்தன்மையால் அவனேயாமென்பது பற்றி ஆவேசமென்றும் இருதிறப்படும்.

அவற்றுள் முன்னையது பற்றி அவ்வாறு கூறிற்றென்க.

இக்கருத்து விளக்குதற்பொருட்டே "பாலின் நெய்போல வேறுப்படமறைந்து நின்று செலுத்தப்படுவனவற்றினும் பொதுவாய்ச்செல்வதாகிய அதிட்டானபக்கம் கொள்வார்க்கு ஏனைச்சம்பந்தாவரும்

குரவராவான்சோலின் அஃது ஈண்டைக்கு அமைவுடைத்தன்றென்பதாம்" எனச்சிவஞான போதச்சிற்றுரை எட்டாம் சூத்திரம் இரண்டாம் அதிகரணத்துள் கூறியதூஉமென்க. ஆவேசபக் கவேறுபாடுகளைச் சிவஞானபாஷியத்திற் காண்க.

## அ. சிவதரிசனம்.

இது மேல் ஞானகுருவைத்தரிசித்த ஆன்மா சிவபெருமானுடைய அருவத்திருமேனியைத்தரிசிக்கும் முறைமையினை உணர்த்துவது.

சற்குருகிருபையின் வயப்பட்ட ஆன்மா அவருடைய உபதேசத்தால் சிவனுடைய திருவடி, திருமுகம், திருமுடிகளினுடைய உண்மையை ஐயவிபரீதக்குற்றமற அநுபவ அறிவினால் அறிந்து இதுவன்றி நித்தியமாயுள்ள பொருளொன்று மில்லையெனத் தெளிந்து மாயாமல காரியமாகிய தத்துவப்பொருள்களில் கன்மமலகாரியமாகிய சுக துக்கங்காரணமாய் யான் எனதென்று விகற்பித

தெழுவதற்கு முன்னிலேயாயுள்ள சகலாவத்தை யினும் தத்துவங்கள் நீங்கினவிடத்துண்டாம் ஆண வமலத்தின் காரியமான கேவலாவத்தையினும் இவ் விரண்டும் நீங்கினவிடத்து நீக்கிநின்றதன்னைப் பிரமமென்னும் அகம்பிரம ஞானத்தினும் பொருந் தாமல் இறைவனுடைய வியாபக அறிவினுள் தன் னுடைய அறிவடங்கி அவ்வறிவேயாய்த்தனக்கொ ரு செயலின்றியாவும் சிவசத்தியினது செயலாய்ப் பெத்தத்தில் பூரணவின்பம் தோன்றாமல் ஏகதேச வியாபாரமாகிய விடய இன்பமேதோன்ற அவ்வின் பங்களை உண்மையென்றநுபவித்து நின்றமுறைமை போல விடயஇன்பம் எவ்விடத்தும் தோன்றாமல் இறைவன் பரிபூரண இன்பமே எவ்விடத்தும் தோன்றக்கண்டு அனுபவிப்பது சிவதரிசனமாம்.

சிவதரிசன மாவது அறிந்து தெளிந்து பொரு ந்தாது ஆகித் தோன்ற நிற்பதென்று வினை முடிபு செய்க.

திருவடியறிதலாவது பிருதிவிமுதல் சிவதத்து வமீறாய் ஒவ்வொன்றையும் நியதிசெய்து அவற்

றையானென்றும் எனதென்றும் கருதிவந்த அசத்திய புத்திநீங்கி உள்ளீடாய்ப்பரோன்முகமாய்ச் சென்று அங்ஙனம் சென்றதானும் தோன்றாமல் நின்றவிடம் சிவன்திருவடியாம். இதனை "பாதமிரண்டும் வினவிற் பாதாளமேழினுக்கப்பால்" என்ற மணிவாசகத்தானும் "யானெனதென்றற்றவிடமே திருவடியாம்" என்னும் குகவரப்பிரசாதியாய் விளங்கிய குமரகுருபரசுவாமிகள் திருவாக்கானும் தெளிக. யான் எனதென்னும் உணர்வு தொழிற்படுமாறின்மைதோன்றப் பாதாள மேழினுக்கப்பால் என்றதிருவாக் கெழுந்தது. இவ்வாறு நிற்றலே திருவடியைத் தரிசித்தல்.

திருமுகம் அறிதலாவது தன்னைத்தாக்குவதான விடய போகங்களை அவன் அவள் அதுவாய் நோக்காமல் அவ்விடயங்களெல்லாம் அசித்தாதலின் சித்தைச் சேர்ந்தன்றி விளங்காதென்றும் திருவருள் கூட்டிவித்தாலன்றிக் கூடாதென்றும் இவ்வாறாதலின் யாவும் சிவமேயென்றும் விடயாநுபவமெனச் சிறிதும் தோன்றாது அவற்றைச்சிவாநு

பவமாக அறிந்தநுபவிப்பது இறைவன் திருமுக தரிசனமாம்.

ஒருவன் முன்னிலையாய் வந்ததொன்றினை ஒருவன் முகத்தால்வந்ததென்றும் நிருபத்தைத் திருமுகமென்றும் கூறுவதுபோலச் சிவன் முன்னிலையாய்க் காணுமிதற்குச் சிவன் திருமுகமெனக் கூறப்பட்டது.

திருமுடியறிதலாவது ஆசிரியர் உபதேசத்தாலுண்டாகும் சிவஞானத்தால் தத்துவங்களை நியதி செய்து நியதிசெய்ததானும் தோன்றுதிருத்தலோடு சிவாநந்தத்தில் பரவசப்படுதல் சிவபிரான் திருமுடியறிதலாம்.

இதனை இத்தன்மைத்தென்று சொல்லமுடியாதாதலின் "சோதி மணி முடிசொல்லிற் சொல்லிறந்து நின்றதொன்மை" என ஸ்ரீமணிவாசகப் பெருமானும் "மோனபராநந்த முடியாக" என ஸ்ரீகுமரகுருபரசுவாமிகளும் அருளிச்செய்வாராயினர். முடியென்றது அறியக்கூடியதும் அறுதியிடக்கூடாததும் என்று பொருள்கொள்க. இன்பம் என்

பதும் இதுவே. இதுபற்றியே "மகட்குத்தாய் தன் மணாளனோடாடிய சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமாறெங்ஙனே" என்று திருமூலர் திருவாய் மலர்ந்தருளினார்.

சிவபிரான் திருவுருவம் இவ்வாறுதலினாற்றான் விஷ்ணுமூர்த்தியும், பிரமதேவரும் அறிந்து அறுதியிட்டுவேனென்னும் போதத்தினுடன் சென்று அடிமுடிகாணாராயினர்.

மேற்கூறிய அகம்பிரமஞானம் மாயாவாதி மதத்துட்பட்டதன்று. நான் பிரமமென்னும் சொல்லொருமையால் அங்ஙனங் கொள்ளுதல் பொருந்தாது. நானென்னும் உணர்வுக்கு விடயமாய் நிற்பது தேகமும் ஆன்மாவுமாம். மாயாவாதிகள் நானென்னும் உணர்விற்கு விடயமாய்த் தேகத்தையே கொண்டு நான்பிரமம் என்பர். அது பசித்தவன் உண்ணாமலே உண்டதுபோல் பாவிக்கும்வெறும் பாவனை போலவாம்.

இம்மாயாவாதிகள்வேறு. வேதாந்திகள்வேறு. நானென்னும் உணர்விற்கு ஆன்மாவை விடயமாகக்

கொண்டு அவ்வான்மாகருவிகளினின்றும் விடுபட்ட விடத்து அங்ஙனம் நிற்குந்தன்னைப் பிரமமெனக் கருதுதல் ஈண்டுக்கூறிய அகம்பிரமஞானமாம். பசுஞானமென்பதும் இதுவே. இதனை

"கருவியாமனமும் புத்தியகங்காரஞ் சித்தநான்கு மருவியான்பாவே யென்னவருந்தீப மெனத்தெரிந் தங், கொருவியான்மாவினுண்மையுணர்ந்தவர் தமை யுணர்ந்தோர், தருமிதுபசஞானம்" எனவும் "நணு கியான்மாவிவை கீழ்நாடலாலே, காதலினானன் பிரமமென்னுஞானங் கருது பசுஞானம்" எனவும் கூறும் சிவஞானசித்திச்சுருதியால் தெளிக.

ஆன்மா தனித்து நிற்றற்கோர் இயைபின்மையின் கருவிகளினின்றும் விடுதலையெய்தினவன் "இந்திரியத்தின் வேறுவான்காணவே தமதுமுதல் சீபாதத்தையணையும்" என்ற சிவஞானபோதச் சுருதியின்படி பதிஞானத்தையடைதல் ஒருதலையே யாயினும் அங்ஙனம் அடைந்துழியும் பயிற்சிவ யத்தால் தற்போத முண்டாகும். உண்டாகவே, பாசஞானம் தலைப்படும். ஆதலின், தற்போதம்

நீக்கவேண்டி அதனை ஒரவத்தையாகப் பசுஞான மெனவைத் தெண்ணப்பட்டது.

K. CHIDAMBARANATHA MUDALIAR, 23 JUN 1914 SHIYALI.

## ௯. சிவயோகம்.

இதுமேல் சிவதரிசனஞ்செய்த ஆன்மா சிவனுடன் இரண்டறக் கூடுமுறைமையினை உணர்த்துவது.

யோகமென்பது கூடுதல். சிவனுடன் ஆன்மா கூடுதல் சிவயோகமாம்.

சிவமும் ஆன்மாவும் பொருட்டன்மையால் ஆதித்தனொளியும் கண்ணொளியும் போல் இரண்டேயாயினும் கலப்பினால் உடலும் உயிரும் போல் வேறன்மையின் அங்ஙனம் வேறுபிரிக்கப்படாத ஆன்மா பிரிந்திருந்தாலன்றோ கூடுதல்கூடும். பிரிக்கப்படாத பொருட்குக் கூடுதல் கூறின்யாங்ஙனம் பிரியுமென்றும் எப்பொழுது பிரிந்ததென்றும் யாதினாற் பிரிந்ததென்றும் மேல்கூடினும் பிரியுமோ வென்றும் இவை முதலான சந்தேகங்கள் நிகழு

மாதலின் சிவத்துடன் ஆன்மா கூடுமென்று கூறு தல் பொருந்தாதெனின், அற்றன்று.

என்னே ? யாதனையாதனைப் பற்றிஞன் அதன தன்வண்ணமாய் நிற்கும்இயல்புடையவன் ஆன்மா. யார்யார் எதை விரும்புகின்றூர்களோ அவரவர்க்கு உடனுய்நின்று அதை உபகரிக்கும் வள்ளற்றன்மை யையுடையவன் சிவன். இவ்வாறுசிவமும் ஆன் மாவும் நிற்பினும் பொருள்களை அறிதற்குத் துணை யாய் நின்ற ஆதித்தனைப் பொருளை அறியுங்கால் கண்ணறியாததுபோல் ஆன்மாவிடயத்தில்அழுந்தி நிற்குங்கால் முதல்வனை அறியாது. துணையாய் நின்றஆதித்தனைக் கண்ணேக்குமிடத்துப் பொருள் தோன்றுமல் ஆதித்தனே தோன்றிப் பிரிப்பின்றி நிற்குமாறு போலச் சிவனை அறியவிரும்பின ஆன் மாவுக்கு விடயந்தோன்றுமல் சிவம்தோன்றி பிரிப் பின்றி நிற்கும். விடயமாய் நிற்கும்போது உட் பட்டும் அவனுய் நிற்கும்போது முற்பட்டும் முதல் வன் நிற்றலால் பிரிப்பின்மையும் விடயப்பற்றறுதி யும் முதல்வனைப் பற்றுதலும் வேண்டப்படுதலால் கூடுதலும் பொருந்து மென்க.

இனிக்கூடுதலின் முறைமையாவது கன்மத்துக்கீடாகச் சப்தாதி விடயங்களில் எவ்விடயம் வந்து பொருந்தினும் அவ்விடயத்தை எதிரிட்டுப் பார்த்து இது மாயாகாரிய மென்றும் விடயத்தினின்றும் விளங்குவதாதிய இதாகிதங்கள் கன்மத்தின் காரியமென்றும் கண்டு விடயத்தினின்றும் நீங்கி அவ்விடயத்தைச் சார்ந்து அதுவாய் நின்று புசிக்கும் ஆன்மாநித்தியனும் பூரணனும் அறிவாயுமிருப்பினும் தனக்குச் சுதந்தரமாக அறியுந்தன்மை இன்மையானும் விடயப்பொருள்கள் சடமாதலினானும் ஒன்றையும் நம்மால் அறிந்தெடுத்துப்புசிக்கவும் விடயம் தானே புசிப்பாக வரவும் இயலாதாதலின் விடயப்பொருள்களை நமக்குக் கூட்டுவிப்பதும் அவற்றைநாமறியும் படிக்கும்அநுபவிக்கும் படிக்கும் அறிவித்துச் செலுத்தி நிற்பதும் இறைவன் திருவருளேயென உயிரின் உள்ளீடாய்த் திருவருளைத் தரிசிக்கவேண்டும்.

அதன்மேல் சூட்டினின்றும் பிரிக்கமுடியாத அக்கினி போலத் திருவருளினின்றும் பிரிக்கமுடி-

யாத இறைவனே நம்மீதுவைத்த பெருங்கிருபை யினுல் குருமூர்த்தியாய் மாநுடச் சட்டைதரித்து வந்து உபதேசித்த தென்றுணர்ந்து அருளின் உள்ளீடாய் அகண்டாகாரமாய் நிற்கும் இறைவனே தானுய் தானே இறைவனுய் நிற்கவேண்டும்.

அங்ஙனம் நிற்குங்கால் பிராரத்தவாதனையால் வந்து தாக்கப்பட்டவிடயங்களை இறைவன் அருளிற்கண்டு இவ்விடயங்களின் முன்னிலையாய் நல்வினையைச் செய்விப்பதும் தீவினையைச் செய்விப்பதும் அவ்வருளேயென்றும் இந்நன்மை தீமைகளை அறியும் அறிவும் அவற்றின் புசிப்பும் அவ்வருளே யென்றும் ஒருசிறிதும் தனக்குச்செயலில்லையென அருட்செயலில் நிற்கவேண்டும். இதுவே சிவயோகம்.

சிவயோகத்தைத் தொகுத்துக் கூறுமிடத்து விடயத்தின் உள்ளீடாய் உயிரையும் உயிரின் உள்ளீடாய் அருளையும் அருளின் உள்ளீடாய் இறைவனையும் கண்டு இறைவனையன்றி யாவுமில்லையென்று அவ்விறைவனேயாய் நிற்றலாம்.

இச்சிவயோகம் அட்டாங்கயோகத்துட் பட்டதன்று. அவ்வட்டாங்கயோகம் சரியை கிரியை யோகம் ஞானமென்னும் நால்வகை நெறியினுள் மூன்றாவதாய்க் கூறப்படும் யோகமாய் இதற்கு அங்கமாம். அது மனத்தொழில் மாத்திரையானே, சிவபிரான் அருவத்திருமேனியை வழிபடுவதாம். ஈண்டுக்கூறிய சிவயோகம் உருவம் அருவம் அருவுருவம் என்னும மூன்ற திருமேனிக்கு மேலாய் ஞாதுரு ஞானஞேய மென்னும் பகுப்பின்றி அத்துவிதமாயியைந்த அகண்டாகார நித்தவியாபக சச்சிதாநந்தப் பிழம்பாய் நிற்கும் சிவபிரான்மாட்டு அறிவுத்தொழிலாற் செய்யும் வழிபாடாம். அட்டாங்கயோகம் மூன்றாவது நெறியாகக்கூறப்பட்ட யோகத்துளடங்குமென்பதை,

சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்து வளியிரண்டுஞ்
, சலிப்பற்று முச்சதுர முதலாதாரங் [ங்
ளகமார்க்கமறிந்தவற்றினரும் பொருள்களுணர்ந்த
கணைந்துபோய் மேமேலறியலர்மதிமண்டலத்தின்
முகமார்க்கவமுதுடல முட்டத்தேக்கி

முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாகவினைக
ளுகமார்க்க வட்டாங்கயோகமுற்று [வர்]
முழத்தலுழந்தவர் சிவன்றனுருவத்தைப்பெறு
என்னுஞ் சிவஞான சித்தியால் உணர்க.

இவ்வட்டாங்க யோகத்தில் எட்டாவதாகக் கூறப்படுஞ் சமாதிமனத்தொழில் மாத்திரையாய்த் தியானிக்கப்படும் பொருளோடு வேறற நிற்றலாம். ஈண்டுக்கூறிய சிவயோகம் மேற்கூறியவாறு அறிவுத்தொழில் மாத்திரையான நிட்டையாம். ஆதலால், சமாதியென்னும் சொல்மாத்திரையானே இந்நிட்டையென்றுவது இதனோடு சமானமென்றுவது கொள்ளற்க.

இதுயோக மென்னும் தனிப்பெயரால் விளங்காது சிவயோக மென்னும் பெயரால் விளங்கிச்சிவபிரானோடு இரண்டறக்கலத்தலைப் பயத்தலின் ஞானமேயாம். இதனை, ஞானிகளைச் சிவயோகியெனக் கூறும் உலகவழக்கானும் "யோகியாய் யோகமுத்தி யுதவுதலதுவுமோரார்" எனவும் "கண்ணுதல் யோகிருப்ப" எனவும் கூறிய சாத்திர வழக்கானும்

"பரமனே பரமயோகி" எனவும் "ஒழிவற நிறைந்த யோகமே" என்னவும் அருளிய தோத்திர வழக்கானும் உணர்ந்து கொள்க.

இச்சிவயோகத்தினையே பெரிய புராணத்தில் "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்" என அருளிச்செய்யப்பட்டது. இச்செய்யுளில் சிந்திக்குமென்றது அந்தக்கரணங்களுள் ஒன்றாகிய சித்தத்தின் செயலன்று, அறிவின் செயலேயாம். இதனை உணர்வரிய மெய்ஞ்ஞானம் என அச்செய்யுளிலேயே பின்னர்க்கூறியவாற்றால் இனிது தெளிக. இன்னும் அச்செய்யுளில் பிறப்பிறப்பென்னும் துன்பத்தை முறைமையில் நீக்குவதாய பதிஞானம் சிவஞானமென்னும் இரண்டினுள் மேற்பட்டது இச்சிவஞானமே யென்பது தோன்ற "பாரினிலோங்கிய ஞானம்" என்றும் ஒப்பற்ற மெய்நூலில் விதந்தெடுத்தோதப்படுவதும் இச்சிவஞானமே யென்பது தோன்ற "உவமையிலாக்கலைஞானம்" என்றும் மனத்தால் உணர்தற்கரிய பிரிப்பற்ற நிலையினையும் ஆநந்தாநுபவ உண்மையினை

யும் தெரிப்பது இச்சிவஞானமேயென்பது தோன்ற "உணர்வரியமெய்ஞ்ஞானம்" என்றும் இங்ஙனம் சிவஞானமாகிய ஒருஞானத்தையே விசேடித்துக் கூறியிருப்பதையும் இனிது தெளிக.

இனிஇச்செய்யுளில் இரண்டு ஞானமேகூறிற்றென்றலும் ஒன்று. அது முதல்வனுடைய பொதுவியல்பாகிய உருவதிருமேனியைத்தரிசித்தல் என்னும் பதிஞானமும் சிறப்பியல் பாகிய சச்சிதாநந்தத்திருமேனியைத் தரிசித்தலாகிய சிவஞானமுமாம்.

அங்ஙனமாயின், பாசபசு ஞானங்கட்கு மேற்பட்டு விளங்கும் பதிஞானத்தினையே நூல்களில் உயர்த்திக்கூறுகிற்பவும் ஈண்டு அதனையும் கீழ்ப்படுத்தி அதற்குமேலொரு ஞானமுண்டென்று கூறுதல் பொருந்துமாறு யாங்ஙனமெனின், சிவஞானபோதம் ஒன்பதாம் சூத்திரத்தில் "ஞானக்கண்ணினிற் சிந்தை நாடி" என்றும் சிவஞானசித்தியார் ஒன்பதாம் சூத்திரத்தில் "பதிஞானத்தாலே நேசமொடுமுள்ளத்தே நாடி" என்றுங்கூறியது சிவ

தரிசனஞ் செய்வதற்குத்துணையாய் வேண்டப்படு வது பதிஞான மென்பதனை உணர்த்துதற் பொருட்டு. அவ்வாறு சிவதரிசனஞ் செய்தலோடமையாது சிவத்தோடு இரண்டறக் கலத்தற்கு மேற்செய்யுமாறு உண்டென்றும் அது சிவயோகம் சிவபோகமென இரண்டாய் விளங்குமெனவும் அங்ஙனம் விளங்கினும் அவ்விரண்டிற்கும் இடையீடின்மையின் அவையே சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமென்பதும் தோன்ற சிவபோகம் கூறுவதான சிவஞானபோதம் பதினொன்றுஞ் சூத்திரத்தில் "அயராவன்பினரன் கழல் செலுமே" எனவும் சிவஞான சித்தியார் பதினொன்றுஞ் சூத்திரத்தில் "பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பார் பதார்த்தங்கள் பாரார்" எனவும் கூறியிருத்தலால் பொருந்துமாறு காண்க.

இவ்விரண்டு ஞானமும் விடயத்தை விளக்குவதற்குத் துணையாயிருந்த சூரிய கிரணத்தையும் சூரியனை விளக்குவதற்குத் துணையாயிருந்த சூரியனது பிரபையையும் போலவாம்.

இன்னும் இதனுண்மையைப் பராசத்தியோடு கூடின அவதரம் சிவஞானமென்றும், இச்சா ஞானக் கிரியாசத்திகளோடு கூடின அவதரம் பதி ஞானமென்றும் அநுபவ அறிவுடையோர்கூறுவர்.

பதிதரிசனத்தால் அருள் விளக்கமும் சிவதரிசனத்தால் ஆநந்த விளக்கமும் உண்டாம். பதியென்றும் சிவமென்றும் இரண்டாகக் கூறினும் பொருள் இரண்டல்ல. ஒரு பொருட்கே உரிய சாமானிய விலக்கணமாகிய பொதுவியல்புபதியென்றும் விசேட இலக்கணமாகிய சிறப்பியல்பு சிவமென்றும் கூறப்படும். அளவை நூலார் பல பொருட்குரிய தன்மை பொதுவென்றும் ஒரு பொருட்கே உரியதன்மை சிறப்பென்றும் கூறுவர். பொதுச்சிறப்பென்னும் சொல்லொருமையால் இரண்டு நூல்களின் கருத்தும் ஒன்றாகமாட்டா. ஒரு பொருள் இருதன்மைப் பட்டுப் பதியெனவும் சிவமெனவும் நிற்குமென்பதை

உலகெலாமாகி வேறாயுடனு மாயொளியாயோங்கி
யலகிலாவுயிர்கள் கன்மத்தாணையினமர்ந்துசெல்லத்

தலைவனுயிவற்றின் றன்மை தனக்கெய்தலின் றித்தா
நிலவுசிரமலனாகி நின்றனனீங்காதெங்கும். [னே]

என்னுஞ் சிவஞான சித்தித்திருவிருத்தத்தில் தலைவனுயென்றதனுல் பதியினையும் அமலனுயென்றதனுல் சிவத்தினையும் உணர்த்தியவாறுகாண்க.

இஃதன்றியும் சர்வஞானோத்தரத்தில் "பகாதி காரத்தோடு கூடியவப்பதியார், பசுபாச வதிகார ரகித சிவனெனத்தப்படி, யிருப்பன்" எனவும்.

பதியெனவேசொலற்குரியபரமன்மந்திரான்மா
பஞ்சமந்திர தேகி மந்திரங்கட் கெல்லாம்
அதிபதியைந்தொழில்புரிவோன்பதவருணுதிகளா
னருச்சனைபண்ணப்படுவோன்சடபுவனங்களினுக்
குதவியாதாரங்காமியங்களெல்லாங்கொடுப்போன்
யோக பீடத்திருப்போன் ஞானகன்மமொப்பான்
அதிதூலசூக்குமமிச்சிரனுமாயிருப்பா
னருண்மனோன் மணிமுதல்வனவன் சதாசிவனே

எனவும்,

பரமசிவன் சதாசிவனென் பதிக்கு மேலோன்
பகர்நிரஞ்சனன்னிராமயனிராதாரன்

தருவருண ரூபமிலான் சருவக்ஞன் சாந்தன்
சருவபரி பூரணன்சர் வான் மாவா யிருப்பான்
அருள் சர்வதோ முகனசிந்தி யன்னறிவுக்கெட்டா
னதிருக்கு மன்னிராலம்ப னென்று முள்ளான்
ஒருவன் சத்தியினன்வியாபகனப்பிரமேய [வோன்
னுவமையிலான் றிலதயிலத்துட் புறம்பொத்துறை

எனவும் கூறியிருத்தலால் பதிசிவபேத வுண்மைகாண்க.

இச்சிவயோகம் மனத்தொழிலன்று அறிவுத்தொழிலே யென்பதனை

அறியாமை யறிவகற் றியறிவினுள்ளே
யறிவுதனை யருளினு னறியாதே யறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்களோடுங்
கூடாதே வாடாதே குழைந்திருப் பையாயில்

என்னும் சிவஞான சித்தியால் உணர்க.

இச்செய்யுள் தெளிதலினிலக்கண மன்றோ கூறிற்று இது நிட்டையாகிய ஞானயோகமாமா றாங்ஙனமெனின், தெளிதலுக்கும் நிட்டைக்கும்

இடையீடின்மை யாதலினென்க. இடையீடாவது புண்ணியபாவத்தால் ஏகதேசப்பட்டு மேலுங் கீழும் செல்லுதல். அது தெளிந்தபோதே நீங்குவதாம். இதுபற்றியே, "புண்ணியமே ஞேக்குவிக்கும்" என்றற்றொடக்கத்துச் சிவஞானசித்திச்செய்யுளுரையில் "தெளிந்தார்க்குக் கண்ணுதல்தன் நிறைவதனிற்கலத்தற்கணிடையீடின்மையினிது விளக்குவார் இடையீடாவன இவை யெனபதுவும் அவைகழிந்தவாறும் உடன் கூறினர்." எனக்கூறியதாம், அன்றியும் திருக்குறளில் "பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு" என்னும் திருக்குறளுக்குத் தெளிதலென்று உரை கூறியிருத்தலானும் வீட்டைக்கு வேறுகுறள் கூறுமையானுந்தெளிக.

இதுகாறும் கூறியவாற்றால், ஆன்மா சிவத்தோடு கூடுதல் சிவயோக மென்றும் இச்சிவயோகம் பதிஞானத்தின் மேற்பட்ட சிவஞானமா மென்றும் அட்டாங்கயோகம் இதற்கங்கமென்றும் விளக்கியதாம்.

## ௯. சிவபோகம்.

இது மேல் சிவனோடு கூடிய ஆன்மா சிவாநந்தத்தை அநுபவிக்கும் முறைமயினை உணர்த்துவது.

கண்ணொரு விடயத்தைக்காணுங்கால் ஆதித்தனொளி கண்ணொளியோடு கலந்துநிற்றலே யன்றி விடயத்தினும் ஆதித்தனொளி கலந்து நிற்கவேண்டும். அங்ஙனம் நில்லாவிடத்து விடயம் விளங்கினும் கண் தெரியாது கண்விளங்குவதாய்த் தொழிற்படினும் விடயங் காட்சிப்படாது. இதுபோல உயிரொரு விடயத்தையறியுங்கால் முதல்வன் உயிரோடுகலந்து நின்றறிதலேயன்றி விடயத்தோடுகலந்துநின்று காணப்படவும் வேண்டும். இவ்வாறு உபகரித்து வரும் முதல்வனை உயிர்க்கறிய வொட்டாது மறைத்தலைச் செய்து விடயத்தைக் காட்சிப்படுத்தி விருப்பு வெறுப்புற்றுழலச் செய்யும் மலமாயாகன்மங்களை ஆசிரியர் உபதேசத்தில் உரைத்து

நிற்கும் வலியால் அறவே நீக்கிச் சிவபிரானோடு பிரிப்பின்றி நின்று சிற்குணமாகிய எண் குணங்களும் தன்மாட்டு விளங்கக்கண்டு அனுபவிப்பது சிவ போகம். இதுவே முத்தியாம். போகமென்பது இன்ப துன்பங்களின் அநுபவம்.

அற்றேல், அநுபவிக்கும்பொருள் அநுபவ அறிவு அநுபவிக்கப்படும் பொருள் ஆகிய மூன்றும் சிவபோகத்தில் வேண்டப்பட்டு, படவே அழி பொருளாகிய விடயப்பொருளோடொப்ப அநித்தியமும் பேதமுமாமாதலால் இவ்வேறுபாடுகளொன்றுமின்றியிருத்தலே சிவபோகமெனின், இது பாடாணவாதமாதலால் இவ்விடத்திற் பொருந்தாது. அன்றியும், அறியவேண்டிய ஆன்மாவினால் அறியப்படாதாயின் பொருளே யில்லையாய்ச் சூனியவாதத்தையும் பொருந்தும். ஈண்டுக்கூறிய சிவபோகத்தின் இயல்பாவது இவையெல்லாமல்லவாய் மேற்கூறிய மூன்றும் வேண்டப்பட்டு, படினும் விடயத்தைப்போல அந்நியமின்றி அனன்னியமாய் நின்றநுபவிக்கப்படுவதாமென்க. இதனை

ஏகமாய் நின்றே யிணையடிக ளொன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினை—னேகமா
யுள்ளத்தின் கண்ணுணை னுள்குவா ருள்கிற்றை
யுள்ளத்தாற் காணுமோ வுற்று. என்னும் சிவஞா
ன போதத் திருப்பாசுரத்தானும்,

ஒன்றுற மதனை லொரு பொருளாகா
திரண்டினல் வேறு மாகாது
தொன்றுறு நிலையே நிலையதாய்ச் சேர்ந்து
துன்னலுந் துன்னுறுமையுமற்
றன்று மாணவத்தினழுந்தி யாங்கறிவா
யறிவினு ளழுந்தியங்கறிவு
பொன்றியும் பொன்றுதவச மாயின்பப்
புணரிவாய் மடுப்பது போகம் என்னும்
தணிகைப் புராணச் செய்யுளானும் தெளிக.

அவ்வாறு நின்றநுபவிப்பது எவ்வாறெனின், சூரியப் பிரபையோடு கூடிநின்ற கண் சூரியனை யறியுமாறுபோல ஆன்மா பராசத்தியோடு கூடி நின்று அந்நிய மில்லாமலே சிவாநந்தத்தை அநுபவிப்ப னென்க.

அநுபவிப்ப னென்றபோது அந்நிய மின்மை எவ்வாறு கூடுமெனின், சுழுத்தியிற் சுகமாய்த் தூங்கினே னென்று சாக்கிரத்திற் சொல்லுகை யால் சுகத்தையறிதற்குரிய தானுங்கருவியும் ஆண் டுளவாம். இன்றேல், சாக்கிரத்திற் சொல்ல இயை யில்லை. இருப்பினும் வேறு நிற்பது மன்று. பிற ர்க்கறிவிப்பதுமன்று. தண்ணீருக்கு ளிருக்கும் ஒருவனுக்குத் துன்பத்தை அநுபவிக்கு மறிவும் தானும் இருப்பினும் ஆங்குச் சொல்ல முடியா தது கொண்டு துன்பமில்லை யென்ருவது தானில்லை யென்ருவது சொல்லமுடியாது. இவ்வாறு அறி யப்படும் பொருளாகிய சிவன் ஞான சொரூபியாய ஆன்மாவின் அறிவைத் தன்னறிவி லுளடங்கச் செய்து ஒன்ருயும், பொருட்டன்மையினுல் ஆன் மாவுக்கு வேருயும் கிருபையினுல் ஆன்மாவைத் தனக்கு வடிவமாகக் கொண்டு உடனுயும் நிற்பனு தலில் நிட்டையில் ஆன்மாவுக்குச் சிவாநந்தாநுப வம் கூடும்'. கூடினும், வேறு நிற்பதுமன்று; பிறர்க்கறி வித்தலு மன்றென்க.

இவ்வாறு அறிவானும் அறிவும் அநுபவமும் உண்டென்பதுதான் எதனாற் பெறுது மெனின், மாணாக்கர்க்கு அறிவுறுத்துதற் பொருட்டு நிட்டையினின்றும் நீங்கி வெளியே வந்தபோது உபதேசித்தலாற் பெறுது மென்க.

அவ்வாறு கூறுங் காலத்து விடயாநுபவமாய் நிற்பரோ, சிவாநுபவமாய் நிற்பரோ வெனின், அநுபவமென்பது அறிந்த பொருளில் அழுந்துதல். கழைக்கூத்தாடி யொருவன் பிறருக்கு நடித்தலைச் செய்யினும் தன் கருத்து உயிர்க் காப்பிலிருத்தல் போலும், நீர்க்குடம் கொண்டு செல்லும் ஒருத்திகை வீசித்தோழியோடு வார்த்தையாடிச் சென்றாலும் அவள்மனம் நீர்க்குடத்தேயிருப்பது போலும், எத்தொழிலைச் செய்யினும் முத்தர் மனம் சிவாநுபவத்திலேயே அழுந்தி இருக்கு மென்க.

அன்றியும், சுட்டியறிதல், விபரீதமாயறிதல், விருப்பு வெறுப்புற்றறிதலாகிய இவற்றை உண்டு பண்ணும் மலமாயா கன்மம் இச்சிவபோக முடை

யார்க்கு அறவே நீங்கலால் நிட்டை நீங்கிய காலத்தும் பரஞானத்தாற் பரமே பார்த்திருப்பரன்றிப் பதார்த்தங்களாகச் சுட்டிப்பாரரார்.

மலமறவே நீங்குமென்பதனை,

இருவினைச்செயல்களொப்பி
  னீசன்றன்சத்திதோயக்
குருவருள் பெற்று ஞான
  யோகத்தைக் குறுகிமுன்னைத்
திரிமலமறுத்துப் பண்டைச்
  சிற்றறிவொழிந்துஞானம்
பெருகி நாயகன்றன்பாதம்
  பெறுவது சுத்தமாமே.

எனக் கூறும் சிவஞானசித்திச் செய்யுளால் ஆன்மாவின் தன்வினையானும் "சொன்ன இத்தொழில்களென்ன" என்றற்றொடக்கத்துச் சிவஞான சித்திச் செய்யுளில் "துன்னிய மலங்களெல்லாந் துடைப்பதுஞ் சொல்லலாமே" எனக்கூறுதலால் ஆன்மாவின் நிமித்தமாய் முதல்வன் செய்யும் பிறவினையானும் இச்செய்யுளுக்குத் "துடைப்பதும்

என்றவும்மையால்பக்குவான்மாக்களிடத்திற்பாசங்களை யெல்லாம்நீக்கியும் அபக்குவான்மாக்களிடத்திற்பாசங்கள் நிற்கையால் பாசங்களுடைய நித்தியமும் கெடாதென்பது கருத்து அல்லது ஏகமுத்தியில் சர்வமுத்திப் பிரசங்கம் வரும்" என்று ஸ்ரீ சிவாக்ரயோகிகள் அருளிய வுரையானும் நன்கு துணியப்படும்.

அற்றேல், முப்பொருளும் நித்தமென்று கூறுதலின் மலம் அறவே நீங்குமென்றல் விரோதமாதலினானும், ஏனைப்பெத்தரிடத்திருத்தலால் நித்தத்திறகு இழுக்கில்லை யென்று நூலாசிரியர் கூறுமையானும்,

தெரிவரிய மெய்ஞ்ஞானஞ்சேர்ந்தவாறே
சிவம் பிரகாசிக்கு மிங்கே சீவன்முத்தனகு
முரியமல மௌடதத் தாற்றடைப்பு ண்டவிடமு
மொள்ளெரியினொளிமுன்னரிருளுந்தேற்றின்
வருபரல்சேர் நீர் மருவுகலங்கலும் போலாகி
மாயாதேதன்சத்திமாய்ந்து காயங்

திரியுமளவும் முளைதாய்ப்பின் புகாயஞ்
சேராதவகைதானுந் தேயுமன்றே.

என்னும் சிவஞானசித்தியாரானும் மலம் சத்திகெட்டு நிற்குமென்றலே பொருத்தமுடைத்தெனின், அற்றன்று. முத்தியென்பது பரமுத்தியே. அதுகிட்டையாற் கூடினும் ஞானமானது அஞ்ஞானத்தையும் ஆகாமியசஞ்சித கன்மங்களையும் கெடுக்குமல்லது ஈஸ்வரனால் நியமிக்கப்பட்ட பிராரத்தவினையைக் கெடுக்காது. அப்பிராரத்தவினைகாரணமாய்த் தேகந்தோன்றுமளவும் சீவன் முத்தியெனப்படும்.

அங்ஙசீவன்முத்தி நிலையில் அக்கினிப்பிரகாசத்தின் முன்னர் இருளில்லாமல் தூரத்தே நிற்பினும் பிரகாசத்தின் முற்பட்டவர்க்குப் பொருளைத்தெரிய வொட்டாமல் அவ்விருள் மறைப்பதில்லை. இதுபோல் சிவஞானத்தைச் சேர்ந்திருத்தலால் தன்னிடத்தில் ஆணவமலமில்லாது ஏனைப்பெத்தரிடத்திருப்பினும் அம்மலத்தை நீக்கும்

சர்வஞ்ஞத்துவம் தனக்கில்லாதிருப்பினும் அம்மலத்தால் தனக்குப் பந்தமான மறைப்பில்லை.

தேற்றான்விரை தண்ணீரிலுண்டான கலங்கலைக் கீழ்ப்படுத்தித்தானும் அதனோடு கீழ்ப்பட்டடங்கி நிற்பினும் யாதானும் ஒன்றால் திரும்பவும் கலக்கப்படும்போது கலங்கலும் விரையும் ஒன்றாகத் தண்ணீர் முழுவதும் வியாபித்துக் கலங்கல் நீராய் நிற்பினும் அவ்விரைமுன்போல் தண்ணீரைத் தெளிவித்துவிடுவதுபோல் சீவன்முத்தன் பிராரத்த வாதனையால் விடயங்களுடனே கூடினாற்போல இருந்தும் தானே அவ்விடயங்களுக்கு வேறாய் நிற்பனாதலால் மாயாமலபந்தமில்லை.

ஒளடதத்தை உள்ளேகொண்டு பாம்பினாலே கடிப்பித்துக்கொண்ட ஒருவனுக்கு அந்த விடம் ஏறாமல் தடைப்படுவதுபோல் சிவபாவனையை உள்ளேகொண்டு அநேக விடய போகங்களைப் புசிக்கினும் அதனால் புண்ணியபாவங்கள் ஏறாதாகையால் கன்மமல பந்தமில்லை.

இவ்வாறு மும்மலங்களும் பொருள் கெடாமல் சத்திகெட்டுத் தேகம் உள்ளளவுமிருந்து தேகம் நீங்கிய பின் பரமுத்தியில் பின்னொருதேகத்தை உண்டாக்குந்தன்மையின்மையினால் அறவேகெடுமென்பதே அச்செய்யுளின் கருத்தாம்.

அன்றியும், ஞானமடைதல் சிவம்பிரகாசித்தல் சீவன்முத்தராதல் என மூன்றவத்தையாக வைத்து ஞானமடைந்தவர்க்கு மலசத்தி ஒரு காரணத்தால் மேற்படினும் பற்றின்றி விண்டொழிதற்கும் சிவம் பிரகாசித்தார் மாட்டு மலமிருத்தற்குச் சிறிதாயினும் இடையின்றியும் ஏனைப்பெத்தரிடத்திருத்தற்கும் சீவன் முத்தருக்கு மெலிவு பார்த்திருத்தற்கும் முறையே பரனும அக்கினியும் ஔடதமும் உவமையாயின எனவும் கொள்க.

பரமுத்தியென்பது விடயாநுபவமின்றிச் சிவாநுபவமாயிருத்தல். அது தான் ஈட்டையில் உண்டாவது. சிவம் பிரகாசித்தல் என்றலும் அஃது. அதுவே, விடயாநுபவம் கழிந்தபோது தானய் இருத்தல் காரணமாய்ப் பரமுத்தியென்றும் விட

பாநுபவத் தோடுங் கூடிப்பற்றற நிற்றலால் சீவன் முத்தியென்றும் வழங்கப்படும். ஆகவே, பரமுத்தி யென்பது சிவாநுபவம் வந்தபொழுதே உண்டெ ன்றுணர்க. இக்கருத்தை இருவினைச் செயல்க ளென்றற் ருெடக்கத்துச் சித்தியார் செய்யுட்குச்சி வாக்ரயோகிகள் உரையானும் தெளிக.

அன்றியும், அரிசியுடன் அநாதியே நின்ற தவிடுமிகள் அரிசியைவிட்டு நீங்கிய பின்னர் முளைத் தற் சத்தி அவ்வரிசியினிடத்தில் அடங்கி நிற்குமே னும் அது முன்போல் மற்ருெரு நெல் தோன்ற ஏதற்குக் காரணமின்றி மெல்ல மெல்ல அறவே நீங்குமாதலின் ஆண்டில்லை யென்பதே தேற்றம். உமிதவிடு நீங்கிய அரிசிகளுள், சிலவற்றில் உமித விடுகள் காணப்படினும் ஏனைய அரிசிகளில் அவை நீங்குவதற்குச் செய்த செயலில் காணுங்கட் டுப்பட்ட ஏதுவால் சத்தி கெட்டுப் பிறிதொரு நெல்லைத்தோற்று விக்கமாட்டாததாய் உணவுக்கு உபயோகப் படுத்துங்கால் அவ்வுமி தவிடுகள் அற வே நீங்கும். இந்தத் திருட்டாந்தத்தானும்,

நெல்லினுக்குத்த விடுமிகள நாதியாயே
நெல்லை விட்டு நீங்கும் வகை நின்றநிலை நிகழ்த்தீர்
சொல்லியிடிற்று களற்ற வரிசியின் பாலில்லைத்
தொக்கிருந்து மற்றொரு நெற்றோன்றி டாவா
மெல்ல விவை விடுமறவே யிவைபோல வணுவை
மேவுமல முடல் கன்ம மநாதி விட்டே நீங்கு
நல்ல சிவமுத்தியின் கட் பெத்தான்மாவை
நணுகிநிற்கு மாதலா னாசமு மின்றாமே,

என்னும் சிவஞான சித்தியாரானும், முத்தரிடத்து மலம் அறவே நீங்கு மெனவும் ஏனைப்பெத்தரி டத் திருப்பது கொண்டு நித்தத்திற்கு இழுக்கில் லை யெனவும் கொள்க

இன்னும் மலம் அறவே நீங்கு மென்பதனை "மலமாயை தன்னொடு வல்வினை யின்றே" என் னும் சிவஞான போதத்தானுந் தெளிக.

அங்ஙனமாயின், சிவப்பிரகாசத்தில் அழிந்தி டும் பாசமென்னினித்த மென்றுரைத்தல் வேண் டா, வழிந்திடா தென்னின் ஞானமடைவது கருத வேண்டா, வழிந்திடுஞ் சத்திநித்தமழிந்திடாவொளி

யின்முன்னே, ரழிந்திடுமிருளு ராசமடைந்திடா மிடைந்திடாவே,

எனக்கூறுவதால், மலம் அறவே நீங்குமென்றல் முரணும் போலுமெனின் ஆகாது. என்னை? மேற்கூறியபடி சீவன் முத்திநிலைக்குறித்தா மாதலினென்க. பரமுத்திக்கேயாயின், பிரகாசத்தின்முன்னர் இல்லாத விருள் சத்திகெட்டிருக்குமென்றல் பிரகாசம் நீங்கியபோது வேறுகாரணமின்றி ஆங்குண்டாவதால் அறிவது போலச்சிவாநுபவமுடையாரிடத்துமலம் சத்திகெட்டிருக்குமென்பதற்குச் சிவாநுபவம் நீங்கிய விடத்துண்டாம் பந்தத்தாலென்று எடுத்துக் கூறவேண்டும். அங்ஙனம் நீங்குமாறின்மையின் அது பொருந்தாதென்க.

காரியத்தால் உண்டென்று காணப்படாவிடினும் உண்டென்றுரைக்கப்படும் இழுக்கென்னையெனின், உணராதபொருள் சத்தென்னின் ஒருபயனில்லைத்தானும், புணராது நாமுஞ்சென்று பொருந்துவதின்றுமென்றுந், தணவாத கருமமொன்றுந்தரு

வந்து மில்லைவானத், திணரார் பூந்தொடையு மியா மைக்கெழுமயிர்க்கயிறும் போலும்,

என்னும்சிவஞான சித்தியாரால் இப்பிணக்கை நீக்கிக்கொள்க.

அன்றியும், மலம் ஒரு பொருளென்றும் அதற்குப் பலசத்திகள் உளவென்றும் சுருதிகள் கூறுவதால், அதற்கு மாறாகச் சத்தி கெட்டிருக்கு மலமொன்று சத்தியோடுகூடிய மலமொன்று என மலம் பலவெனக் கொள்ளவருமாதலானும் முத்தியில் மலமில்லையென்பதே மேற்றம். இருளொன்றாயிருந்தும் ஒளியோடுகூடிய கண்ணுக்கு இல்லாமலும் ஏனைக்கண்களுக் கிருத்தலும் போலக்கொள்க

அற்றேல், சத்திகெட்டுச் சீவன் முத்தரிடத் திருக்குமென்றல் மலம் ஒரு பொருள் என்றதற்கு முரணுகாதோவெனின் ஆகாது. என்னை? அவரிடத்தில் அற்றம்பார்த்துத் தன் தொழிலைச்செய்யும் சத்தி அடங்கியிருத்தலாலென்க. ஆண்டுக்கெட்டென்பது அடங்கி யென்றும் பரமுத்தியில் கெட்

டென்பது இல்லை யென்றும் பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறு கொள்ளாக்கால் கெட்டது உண்டாமென்றும் கெடுத்தற் பொருட்டுச் செய்யும் தொழில் வீண் தொழி லென்றும் கொள்ள வரும்.

அற்றாயின், ஏனைப்பெத்தான்மாக்களிடத்து மலமிருத்தல் காரணமாய் மலத்திற்கு அநாதித் தன்மை சித்திக்குமாயின் ஆன்மாக்கள் முத்தியடையாமலிருந்து வரவேண்டு மென்பது பெறுதும். பெறவே, ஆன்மாக்களை முத்தியில் சேர்த்தற் பொருட்டே பதிபஞ்ச கிருத்தியம் செய்கின்றன ரென்றும் முத்தியடைந்த ஆன்மாக்கள் மீளப் பிறத்தலில்லை யென்றும் அநாதிப்பொருளுக்கு உற்பத்தியில்லை யென்றும் நூல்களிற் கூறுவதால் பஞ்சகிருத்தியத்தால் சிருட்டிக் கொரு ஆன்மாவன்றிக் கற்பத்துக் கொரு ஆன்மாவாக முத்தியடையினும் காலாந்தரத்தில் எல்லா ஆன்மாக்களும் முத்தியடைதல் கூடுமே கூடாதாயின் இறைவன் தொழில் பயனிலதாயன்றோ முடியும் அங்ஙனம் எல்லா

ஆன்மாக்களும் முத்தியடையின் மலத்துக்கு இருப்பிடமில்லையே யெனின், ஆன்மாக்கள் அளவில்லாதனவாய் எண்ணிக்கைக் குட்படாதனவாதலின், ஒருசேர முத்தியடைதல் பொருந்தாதென்க.

அளவிலாதனவாய் எண்ணிக்கைக்குட்படாதனவென்றது ஒரு களஞ்சியத்திலோ மாளிகையிலோ மற்றெதிலோ குவித்திருக்கும் நெல்லையோ வேறுபொருள்களையோ மிகுதிபற்றி அளக்கமுடியாதாயினும் எடுக்க வெடுக்க அதுகுறையு மாதலின் அதுபோலப் பெத்த நிலையில் நின்ற ஆன்மாக்களை மிகுதியினால் அளக்க முடியாதது பற்றி அளவில வென்றால் ஒக்குமேனும் முத்தியடைதல் பற்றிக் குறைந்து குறைந்து பெத்தான்மா அறவே இல்லாதொழிதல கூடுமெனின்? இது தருக்க வழுவான வினாவேயன்றிப் பிறிதில்லை. என்னை?

எடுக்க வெடுக்கக்குறையும் பொருள் எடுக்கும்போதெல்லாம் கணக்கு வைத்துக் கொண்டால் எடுத்து முடிந்தவுடன் இவ்வளவென்று தெரிதல் கூடுமா கூடாதாவென்பதைச் சிறு மகாரைக்

கேட்கினும் அறிவுறுத்துவர். அங்ஙனம் கூடும் போது இவ்வுவமை அளவிலவென்பதை எவ்வாறு வலியுறுத்துமென்க.

எடுப்பவர் பலராதலால் கணக்கு வைக்கமுடியாதது பற்றி அளவில என்றதற்கு இவ்வுவமை பொருந்துமெனின் தாட்டாந்தத்தில் எடுக்கும் இறைப்பொருள் ஒன்றேயென்பதையும் திருட்டாந்தத்தில் பலரெடுப்பினும் ஒவ்வொருவரும் கணக்குவைத்து மொத்தத்தொகை தெரிதல் கூடுமென்பதையும் உணரின் எவ்வாறு பொருந்துமென்க.

உவமைகளெல்லாம் ஏகதேசமேயன்றி முற்றுவமை ஒன்றற்கும் கூடாதென்று நூல்களில் கூறுவதால் இவ்வுவமை கூடுமெனின் உவமையில்வைத்து உவமைக்கு அப்பாற்பட்ட பொருளை முற்றுமறிதல் இயலாதென்பதற்கே முற்றுவமை ஒன்றற்கும் கூடாதென்றதேயன்றித்தன் சித்தாந்தத்திற்கு இணங்காதவற்றைச் சொல்லிச் சித்தாந்தம் சாதித்தல்

போன்ற பொருந்தா உவமைகூறி உண்மை புலப் படாமல் போவதற்கன் றென்க.

மற்றென்னையோ அளவில வென்பதற்குப்பொ ருள்தானென்னில், எடுக்க வெடுக்கக் குறையா திருப்பதே அளவிலவென்பதற்குப் பொருளாம். இதனை " பிறந்தநாண்மேலும் பிறக்குநாள்போலும் துறந்தோர் துறப்போர்தொகை ,, என்றுகூறியுள்ள திருவருட்பயனுனும் தெளிக.

அன்றியும், பெத்தான்மாக்கள் அறவே இல் லாதொழியின் சுத்தான்மாவுடன் அனன்னியமான சொரூப சிவமேயன்றித் தடத்தசிவமான பதியி லையாய் முடியும். அம்மட்டோ, பாசமுமில்லையாய் முடியும். முடியவே, இவ்விரண்டினையும் உணரும் பசுவுமில்லையாய் நிரீச்சுர வாதமல்லது சூனியவா தமா மென்க.

அற்றன்று. சொரூபசிவமும் சுத்தான்மாவு மிருத்தலால் பாசம் சத்தி கெட்டு இருக்குமெனின், அங்ஙனம் இருக்குமென்று உணர்தலும் கூறாத

லும் கூடாது. அவ்வாறு கூடாததொன்றினையி ருக்குமென்றலால் ஒரு பயனுமில்லையென்க.

அங்ஙனமாயின், முத்திநிலையும் பயனற்றதோ வெனின் பயனுடையதே ஆயினும் பயனுடைய தாக முத்தனுடைய அறிவில் நிகழுமாயின், பரமுத் தனல்ல. சீவன் முத்தனே என்க. பரமுத்திநிலை யும் சிவமும் உண்டென்று கொள்வதற்கு அரசன் உண்டென்பதற்குக் குடிகளும் அங்கமும் வேண் டப்படுவது போலப்பசுவும் பாசமும் இன்றியமை யாது வேண்டப்படும். குடிகளும் அங்கமுமில்லாத போது அரசன் இல்லாதது போலப் பசுவும்பாசமு மில்லாதபோது முதல்வனுமில்லையாய்ப் பரமுத்தியு மில்லையாய் முடியுமென்க.

அவ்வாறாயினும் எடுக்க வெடுக்கக் குறையாத தற்கு எதுவென்னையெனின், அது ஆராய்ச்சி யறி விற்குப் புலப்படுவதொன்றன்று. அநுபவ அறி விற்கே புலப்படுவதாம். ஆதலின், ஞானசற்குரு துவையடுத் ஞானசாதனத்திலுறைத்துச் சிவாநுப

வம் வரப்பெறின் தாமே விளங்கும். தேசிகரும் உணர்ந்துவர்.

முத்தியில் இத்தை விளைவித்தல் மலமென்று மலத்துண்மை கூறவும் மலம் அறவே நீங்குமென்றல் யாங்ஙனம் பொருந்துமெனின், முத்திபெற்ற ஆன்மா சிவமொன்றேயன்றி ஏனையவற்றையும் அறியுமிடத்துச் சிவாநுபவ விளைவிற்குறைபடுமாதலின் ஏனையவற்றை யறிதல் முத்திப் பெரும்பயனுக்கு இடையூறென்பதனையும் ஏனையவற்றை அறியாமையே முத்திப் பெரும்பயனுக்குச் சிறந்தகாரணம் என்பதனையும் இனிதுணர்த்துதற் பொருட்டு அங்ஙனம் கூறினாரென்க.

ஏனையவற்றை அறியாமைக்கும் இத்தை விளைவித்தல் மலமென்பதற்கும் இயைபென்னையெனின், பனி மிகுதியினால் வருந்து மொருவன் சுகம் பெற வேண்டி அக்கினியைப் பக்கத்தில் வைத்துக் கொண்டபோது சுகமுண்டாகிறது அச்சுகம் அக்கினியினால் இயல்பில் உண்டாகக்கூடிய தன்று. உண்டாகுமாயின், வேனிற் காலத்திலு முண்டா

தல் வேண்டும். அங்ஙனமின்மையின் பனி நீக்கத் தின் காரணமாய் அக்கினிபாற் சுக முண்டாயிற்று. அங்ஙனம் உண்டாகுங்கால் பனியும் அதன் செயலும் இவனிடத்தில் தாக்குதலில்லை யாயினும் அக்கினியா லுண்டாகும் சுகத்துக்குப் பனியே ஏதுவாயினாற் போல மலத்தினின்றும் விடுபட்ட ஆன்மா, மீட்டும் மலத்தைப் பற்றுதிருத்தல் ஏதுவாகச் சதாபரமாநந்தப் பெருவாழ்வில் அமிழ்ந்தி நிற்பன். அங்ஙனம் நின்று அநுபவிக்கும் இன்பத்துக்கு மலத்தின் மீட்சி கூடாதென்னு முணர்வே ஏதுவாயிருத்தலின், இத்தை விளைவித்தல் மலம் என்றுரென்க.

இதனைச் சிவஞான பாஷியம் ஆறும் சூத்திரத்தில் கூறியுள்ள சர்வ ஞானோத்தரக் கருத்தானும் சிவஞான சித்தியார் பதினொன்றும் சூத்திரம் ஆறுவது செய்யுளின் உரையின் கீழ். "இதனானே இரதகுளிகை பரிசித்த செம்பிலும் களிம்பு தொக்கிருக்கு மெனக்கோடுமென்பாரை நோக்கித் தொக்கிருத்தல் செல்லாமை அநுபலத்தி ஏதுவின் வைத்

துணர்த்துதற்பொருட்டு வேறு மொருவன்மை கூறு முகத்தான் அம்மூன்று மொருங்கே வலியுறுத்தப் பட்டன" என்று கூறியிருத்தலானும் சித்தாந்த மரபு கண்டனகண்டனத்தில் "பனி மிகுதியின் வெயிலை நாடுவதற் கேதுவாய் நின்றது யாதெனச் சிறு மகாரைக்கேட்பினு மிப்பொருளுமக் கவரறி வுறுத்துவர்" என்று கூறியிருத்தலானும் தெளிக.

அன்றியும், மழையின்மையினால் உண்டாகும் துன்பத்தைக் கூறுமிடத்து இவ்வளவு துன்பமும் மழையினால் வந்ததென்று கூறும் உலகவாய் பாட் டானும் உணர்க.

இவ்வாறு மலநீக்க மெய்திச் சிவாநுபவத் தைக் கூடிய ஆன்மா தேகத்தைத் தாங்கியிருக்கு மளவும் அதனிருப்புக் கேதுவாகிய வினையின் வயத் தால் எச்செயலைச் செய்யினும் தன் செயல் எவ்வி டத்துந் தோன்றாது அருள் நிறைவிலே நிற்பன்.

அங்ஙனம் நிற்றலால் இனைறிவு பூரணமெல் லாம் முதல்வன் தன் வடிவமாகக் கொண்டு தான்

அந்த அறிவு பூரணத்திற் கெல்லாம் உயிராய் இவனறிவு தொழிலாகிய இந்திரிய போகங்களாய் வரும் புசிப்புத் தொழிலுமாக நின்று சகலபோகங்களையுந் தனது பூரண இன்பமாகிய நேயவடிவாகவே இவனுக்குக் காட்டித்தானிவனென வேறற நின்று தன் இன்ப நிறைவே இவன் அநுபவ மாக அமிழ்ந்தி நிற்கும்படி செய்வன்.

சிவாநந்த மேலீடாகிய இதுவே சிவபோகத்தினது முறையாம். இதனையே "அகண்டாகார சிவ போகமெனும் பேரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமா யேகவுருவாய்க் கிடக்குது" என்று ஸ்ரீ தாயுமானசுவாமிகள் அருளிச்செய்வாராயினர்.

இலக்கணவியல் முற்றிற்று.

# இரண்டாவது அநுபவவியல்

தசகாரிய இலக்கணங்கேட்ட பின்னர் அவை யொன்றன்பின் ஒன்ருய்த் தோன்றுமோ மாறித் தோன்றுமோ மாறித்தோன்றினும்ஒன்றென்ருய்த் தோன்றுமோ சில்சில சேர்ந்து தோன்றுமோ ஒன்றென்ருய்த் தோன்றுமெனின் ஆன்மாதனித்து நிற்றற்கோரியை பில்லையே என்னும் அவாய்நிலையை நிரப்புமாறு இரண்டாவது அநுபவவியல் கூறப்படுகின்றது.

அதாவது முப்பொருள்வாயிலாய் நிகழும்மேலையியலிற் கூறும் பத்துக்காரியமும் ஆன்மாவிற்கு அனுபவமாய்த் தோன்றும்போது வரிசைக்கிரமமாய்த் தோன்ருமல் முன் பின்னுகத் தோன்றுவதையும் சிலு சிலசேர்ந்து தோன்றுவதையும் கூறுவதாம்

முன் பின்னுகத் தோற்றுவதற்கும் உடனிகழ்ச்சியாய்த் தோற்றுவதற்கும் இயைபு ஆன்

டாண்டு முன்னர்க் காட்டப்படும். உடனிகழ்ச்சி யாவது ஆடிவருதலென்புழி ஆடுதலும் வருதலும் ஒருசேர நிகழுமாறுபோல.

இப்பத்துக்காரியமும் சாதனமும் பயனுமாயி ருத்தலின் இதனைச் சிவஞானபோதம் சிவஞான சித்தியார் என்னும் நூல்களின் ஏழாவது சூத்திர முதல் பதினொன்றாவது சூத்திரம் வரையுள்ள ஐந்து சூத்திரங்களில் வைத்துப் பொருள்கோ டலே முறைமையாம்.

இவ்வைந்து சூத்திரங்களினும் தசகாரியமட ங்கியிருக்கின்றனவென்பதையே இவ்வியலில் ஆண் டாண்டுவிரித்து விளக்குவதாயினும் அதனை ஈண் டுத்தொகுத்துக் காட்டுதும்.

ஏழாம் சூத்திரத்தில் தத்துவரூபம் தத்துவ தரிசனம் ஆன்மரூபம் ஆகமூன்றும், எட்டாம் சூத் திரத்தில் தத்துவசுத்தி ஆன்மதரிசனம் சிவரூபம் ஆகமூன்றும், ஒன்பதாஞ்சூத்திரத்தில் ஆன்மசுத்தி சிவதரிசனம் ஆகவிரண்டும், பத்தாஞ்சூத்திரத்தில்

சிவயோகமொன்றும், பதினொன்றாஞ்சூத்திரத்தில் சிவபோகமொன்றும் அடங்கியிருக்கின்றன.

இவற்றுள் சிவஞானசித்தியார் பதினொன்றாஞ் சூத்திரத்தில் இரும்பைக் காந்தம் வலித்தாற் போலென்றற் றொடக்கத்துச் செய்யுளினுரையின் கீழ் "மலரடிக்கீழ்வைப் பனெனவும் பாதநிழற்கீழ் நிற்கவெனவும் ஏகனாகி நின்றிடவெனவும் அரன் மலரடிக் கீழிருப்பனெனவும் கூறிய இந்நான்கு சூத்திரங்கட்கும் தம்முட்பொருள் வேற்றுமையில் லைப்போலுமென மயங்காமற் பொருட்டு இறுதிக் கண்ணவற்றை தொகுத்தெடுத்துக் கொண்டு சிவ ரூப முதலிய நான்காக வைத்துணர்த்தியவாறு மாம்" என்பதனாலும் சிவஞானபோதம் ஒன்ப தாஞ் சூத்திரத்தில் "ஆன்ம சுத்திபண்ணுமா றுணர்த்துதனுதலிற்று" என்பதனாலும் சிவஞான பாஷியம் எட்டாஞ் சூத்திரத்தில் "மேலான்மரூப முணர்த்தியீண்டதனைத் தரிசிக்கு மாறுணர்த்துதல் முறைமை யாகலின்" எனக் கூறியிருத்தலானும் ஆன்மரூபமுதல் சிவபோகமீறாயுள்ள ஏழும் விளக் கப்பட்டன.

இனிச் சிவஞானபோதம் ஆறும் சூத்திரத்தில் "சத்துமசத்தும்வரைசெய் துணர்த்துதனுதலிற்று" எனக்கூறி ஏழாஞ் சூத்திரத்தில் "மேலதற்கோர் புறனடை யுணர்த்துதனுதலிற்று" எனக் கூறியிருத்தலானும் ஏழாஞ் சூத்திரம் முதலதிகரணத்தில் "ஈண்டுச் சத்தினிடத்தசத்துப்பிரகாசியாதென்றது" எனவும் இரண்டாமதிகரணத்தில் "இனி அசத்தினுக்கு உணர்வின்றென்றது" எனவும் மூன்றுமதிகரணத்தில் "இருதிறனறிவுளதிரண்டலாவான்மா" எனவும் கூறியிருத்தலானும் தத்துவரூப தத்துவதரிசனமும், எட்டாஞ் சூத்திரம் நான்காமதிகரணத்தில் "இனி யிவ்வான்மா தன்னை யிந்திரியத்தின் வேறுவான் காணவேதமது முதல் சேபாதத்தை யணையுமென்றது" எனக் கூறியிருத்தலால் தத்துவசுத்தியும் ஆகிய வினையமூன்றும் கூறப்பட்டுள்ளன வென்பதை பாரிசேடவளவையாற் கொள்க.

அற்றன்று, தன்னுலறியப் படுதல் கூறுதல் பற்றி ஏழாஞ்சூத்திரத்தில் தத்துவதரிசனம் கூறு

தல் கூடும். அச்சூத்திரத்தில் தத்துவரூபம் அடங்கியிருக்குமென்றல் பொருந்தாது. அது ஆறுஞ் சூத்திரத்தில் அசத்திலக்கணங் கூறுதலானே ஆண்டடங்குமென்றலே யமைவுடைத்து. அன்றிச்சிவஞானசித்தியார் இரண்டாஞ் சூத்திரத்தில் தத்துவங்களின் விவரங்கள் கூறியிருத்தலின் ஆண்டடங்கியிருத்தலும் கூடுமெனின், சிவஞானசித்தியார் இரண்டாஞ் சூத்திரத்தில் தத்துவங்களுண்டென்றும் அது தோற்றுவாயுங் கூறினதேயன்றி ஆன்மா அவற்றைப் பகுத்துக்காண்டல் கூறவில்லை. ஆறுஞ் சூத்திரத்தில் யாவற்றையும் ஒருசேரப்பிறிதொன்றனுபகாரமின்றி யறியும் முதல்வனதிலக்கணங் கூறும்வழி ஒன்றினுபகாரத்தினலும் அறிதல்கூடாததும் பொருள்களில் ஒன்ருய் எண்ணப்படுவதுமான அசத்தினது இலக்கணம் இயைபுபற்றிக் கூறப்பட்டது. இவ்வாருதலின், அவ்விரண்டு சூத்திரங்களில் தத்துவரூபம் அடங்கியிருக்குமென்றல் யாண்டையதென்க.

அன்றியும், அறியப்படும் பொருளே பகுத்துக்காண்டல் ஒருதலையாதலின் தத்துவங்களின்

இலக்கணங் கண்டபோதே மலகாரிய மென்றும் தன்னால் அறியப்படுவ தென்றும் காணுமாதலானும் சாதனங்களுள் வைத்தெண்ணப்படுவதாயும் அவற்றுள் முதலாவதாயு மிருத்தலானும் தத்துவரூபம் ஏழாஞ் சூத்திரத்திற் கூறப்பட்டுள்ள தென்றலே அமைவுடைத்து.

இதுகாறும் இவ்வியலுக்குரிய விஷயத்தின் வகையும் அதற்கு முதனூலும் காட்டப்பட்டன.

இனித்தோன்றுமுறைமை கூறப்படுகின்றது.

ஆன்மரூபத்தில் தத்துவரூபமும் தத்துவதரிசனமும்.

தேகமே தானாகவும் அது பற்றுக் கோடாய் விளங்கும் புறப்பொருளை எனதாகவும் கருதியிருந்த ஒருவனுக்குச் சாத்திரத்தானும் பெரியோர்கள் அறிவுறுத்தும் வசனத்தானும் "பல்லூழி காலம் பயின்றரனையர்ச்சித்தால் நல்லறிவு சற்றே நகும்" என்றபடி தெய்வ கிருபையால் உண்டாம் தம்மறிவினானும தேகம் தானல்ல வென்றும் தேகத்திற்கு வேறாய் உளனென அறியும் அறிவுரு

வாய் யானென்னும் உணர்விற்கு உண்மைப் பொரு ளாய் ஆன்மா ஒன்றுண்டென்றும் அவ்வான்மா அறிவுருவாயினும் தானாய் அறியுஞ் சுதந்தரமில்லை யென்றும் நம்மறிவுக் கறிவாய் உண்ணின்றறிவிக் கும் சுதந்தர அறிவுடைய முதல்வன் ஒருவன் உண் டென்றும் தன்னறிவின் கண்ணே தோன்றும். இங்ஙனம் தோன்றுவது ஆன்மரூபமாம். இவ் வாறு தோன்றும்போது அறியாமையாலுண் டாம் விடுதலையாகிய கேவலத்தில் நிலையாமல் மீளு மாறுபோல் அறிவினாலுண்டாம் விடுதலையாகிய சுத்தத்தில் இல்லாதது முறைமையாதலின் அவ் வறிவால் இது காறும் யானென்றும் எனதென் றும் கருதியிருந்த பொருள்களின் றன்மையினைத் தென ஆராயவரும். அங்ஙனம் ஆராயும் போது தத்துவங்களின் நாமமும் அதன் செயல்களும் வி ளங்குவதாகிய தத்துவரூபமும், இவ்வாறு தனித் தனிநாமம் பெற்று நம்மையன்றிச் செயலும் அறிவு மில்லையாய் அறிவில்லாததாய் விளங்குவதெனக்கா ணும் தத்துவதரிசனமும் உண்டாம். இவ்வாறு

ஆன்மரூபமுண்டாகும்போது தத்துவரூபதத்துவ தரிசனமும் உடனிகழ்ச்சியாய்மூன்றும் ஒருசேரத் தோன்றும். இதுவேநின்மலசாக்கிரம்.

இக்கருத்து விளங்குதற்பொருட்டே சிவஞான போதம் ஏழாஞ்சூத்திரத்தில் "யாவையுஞ் சூனிய ஞ்சத்தெதிராகலிற் சத்தேயறியா" என்று முதல்வ னிலக்கணமும் "இரு திறனறிவுள திரண்டலா வான்மா" என்று ஆன்மாவினிலக்கணமும் "அ சத்திலதறியா" என்று தத்துவப் பிரபஞ்சத்தின திலக்கணமும் ஒருங்கு கூறினாரென்பது இனிது தெளிக.

## சிவரூபத்தில் தத்துவசுத்தியும் ஆன்மதரிசனமும்.

இனி இவ்வாறறிந்த வொருவனுக்குப் பயிற் சிவயத்தால் தேகத்தையும் புறப்பொருள்களையும யானெனதென்று கொண்டிருந்தபோதம் அனுப வமாய் நீங்காமையானும் தானும் முதல்வனும் உண் டென ஆராய்ச்சியாற் றோன்றினும் அனுபவத்திற் றோன்றாமையானும் அங்ஙனம் நீங்கலும் தோன்ற

னும் தன்னுலாகா தெனக் கருதித் தலையில் நெருப்புப் பற்றியவன் பிறிதொன்றையும் நாடாது தண்ணீரையே நாடுவதுபோல் குடும்ப முதலானவிகாரங்களொன்றையும் நாடாது பாசவிடுதலையும் சிவப்பேற்றையுங் கூட்டுவிட்பாளெருரு சற்குருவை நாடிச் சார்வன். இக்கருத்துப் பற்றியே "சாத்திரத்தையோதினற்குச் சற்குருவின் றன்வசன, மாத்திரத்தே வாய்த்தவளம் வந்துறுமே, யார்த்தகடற், றண்ணீர் குடித்தவற்குத் தாகந்தணிந்திடுமோ, தெண்ணீர் மையாயிதனைச் செப்பு" எனத்திருக்களிற்றுப் படியாரிற் கூறியதூஉமாம்.

அங்ஙனம் சற்குருவை யடுத்தபோது அக்குருமேலேயியலிற் காட்டியபடி சிவமே திருமேனியாயெழுந்தருளி யிருத்தலால் அவரைத் தரிசித்தது சிவரூபம். அவர் பாச நீக்கத்தையும் சிவப்பேற்றையுங் கருதியுள்ள இவனுள்ளக் கிடக்கையையுறிந்து ஞானேபதேசஞ் செய்தருளுவர். அவ்வுபதேசத்தில் உறைத்து நிற்கும் வலியால் தத்துவக்கூட்டங்களினின்று அறவே விடுதலையுண்டாய்.

இது தத்துவசுத்தி. அவ்விடுதலை யுண்டானபோது விடுதலை யெய்தியவன் தானே யாயினும் முதல்வனருளையன்றித்தனக்கொரு செயலுமில்லை யெனத்தற்போத முனைப்பற நிற்பன். இது ஆன்ம தரிசனம். இவ்வாறு சிவரூபம் நிகழும்போது தத்துவ சுத்தியும் ஆன்ம தரிசனமும் உடனிகழ்ச்சியாய்த்தோன்றும்.

சற்குருவை யடைந்தபோது அவர் தரிசனமாகிய சிவரூபமும், உடல் பொருள்கள் அவர்க்குத் தத்தஞ்செய்திடலால் சரீர இந்திரியாதிகளின் நீக்கமாகிய தத்துவ சுத்தியும், உயிரைத் தத்தஞ்செய்தலால் யானென்னும் போதமற்று நிற்றலாகிய ஆன்ம தரிசனமும் உண்டாகுமென்று கூறுதலும் ஒன்று. இதுவே நின்மல சொப்பனம்.

அற்றேல் சிவஞானபாஷியம் அவையடக்கத்தில் "தம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்" என்று கூறுதலால் தம்மையுணர்ந் தன்றித் தலைவனை யுணர்தல் கூடாதென்பது பெறுதுமன்றே. அக்கருத்துக்கு மாறாக ஈண்டுத்தலைவனை

யுணர்ந்து பின்றன்னை யுணர்தல் கூறல் முரணுமெ னின் முரணுகாது. அஃது ஆண்டு ஆன்மசுத்தி யெய்தியபின் சிவப்பேறு எய்துதலையுணர்த்திற்று. ஈண்டுத் "தன்னாலெதனை யறிந்தாற்றன்னையுந் தானேகாணும்" என்றுகூறும் சிவப்பிரகாசத்தானும்,

சூரிய காந்தக் கல்லினிடத்தே செய்ய
சுடர்தோன்றி யிடச்சோதி தோன்றுமாபோ
லாரியனுமாசான் வந்தருளாற் றோன்ற
வடிஞானமான் மாவிற்றோன்றுந் தோன்றத்
தூரியனுஞ்சிவன் றோன்றுந்தானுந் தோன்றும்,

என்று கூறும் சித்தியாரானும்,

சிவரூபத்தால் ஆன்மதரிசன முண்டாமாறுணர்த்திற்றென்க. இதனைத் தலைவனையறிந்தபின்னறியப்படுவதாகிய தம்மறிவுகொண்டு தலைவனையறியுமாறு யாங்ஙனம் எனச் சிவதரிசனத்தில் ஆன்மசுத்தியுண்டா மென்பதற்குச் சிவஞான பாஷியத்திற் கூறியதுபற்றியு முணர்ந்துகொள்க.

இவ்வாறு சிவரூபமும் தத்துவ சுத்தியும் ஆன்மதரிசனமும் உடனிகழ்ச்சியாய் ஒருசேரநிக

மூமென்பதைச் சிவஞானபோதம் எட்டாஞ் சூத்திரத்தில் "தம்முதல் குருவுமாய்" என்பதனால் சிவரூபமும், "விட்டு" என்பதனால் தத்துவ சுத்தியும், "அன்னியமின்றி" யென்பதனால் ஆன்ம தரிசனமும் கூறியவாறு பற்றிக் காண்க.

## சிவதரிசனத்தில ஆன்மசுத்தி.

இனி மேற்கூறியவாறு சற்குருவை யடைந்து அவரருளுபதேசம் பெற்று யானெனதறநின்ற மாணாக்கனுக்குப் பதிஞானம் வெளிப்பட்டு விளங்கும். இது சிவதரிசனம். அங்ஙனம் தோன்றிய போது பதிஞானத்துளழுந்திநிற்கின்றேமென்னும் போதமும் தன்செயலுமற்று நிற்பது முறைமையாதலின் அவ்வாறு நிற்றல் ஆன்மசுத்தி. இவ்வாறு சிவதரிசனமும் ஆன்மசுத்தியும் உடனிகழ்ச்சியாய்த் தோன்றும். இதுவே நின்மலசுழுத்தி.

இதனை சிவஞானபோதம் ஒன்பதாஞ் சூத்திரத்தில், "ஞானக் கண்ணினிற் சிந்தைநாடி,, யென்பதனால் சிவதரிசனமும்" "பாசமொருவ" வென்பதனால் ஆன்மசுத்தியும் கூறியவாறு பற்றிக்காண்க.

அன்றியும் "கண்... விவன்றனைக் காட்டி யுயி ருங்காட்டி" எனவும், "அந்தரியாகந்தன்னை முத்தி சாதனமா வறைந்திடுவரது தானுமான்ம சுத்தியா கும்" எனவும் கூறியசித்தியாரானும், "தான்பணி யை நீத்தலான்மசுத்தி" எனச்கூறும் சிவப்பிரகாசத் தானும் தெளிக.

அற்றன்று. அவ்வொன்பதாஞ் சூத்திரத்தில் "ஊராத்துனைத் தேர்த்தெனபாச மொருவ" வென் றும் அச்சூத்திரம் இரண்டாமதி கரணத்தில் "அச த்தாயுள்ள வன்னபேதங்களை அசத்தென்றுகாண வுள்தாநிற்பது ஞானசொரூப" மென்றுங் கூறிய ருத்தலால் தத்துவ சுத்தியும் கூறிற்றெனல் அமை யாதோவெனின், அமையாது. என்னை? உண்மை நெறி விளக்கத்தில் "கண்ணுதலருளால் நீங்கல் சுத்தியாக் கருதலாமே" யெனத்தத்துவ சுத்தி கூறியிருப்பதற் கிணங்கச் சிவஞானபோதம் எட் டாஞ் சூத்திரத்தில் "தம்முதல் குருவுமாய் என் றும் ஐம்புல வேடரைவிட்டு என்.வங் கூறியிருத் தலால் சிவரூபமாகிய குரு தரிசனமும் தத்துவ சுத்

தியும் ஆண்டே நிகழுதலின் ஒன்பதாஞ் சூத்திரத்தில் தத்துவசுத்தி கூறுதல் யாண்டையதென்க.

மற்றென்னையோ ஒன்பதாஞ் சூத்திரத்தில் "பாசமொருவ" வென்றதன் கருத்தெனின், மேற் கூறியவாறு பற்றி ஆன்மசுத்தியேயாமென்க. அஃதாமாறு யாங்ஙன மெனின், கானலை நீரல்ல வென்று கண்டபோதும் கடுவெளி னீங்குங்காறும் முன்போற் றோன்றுதல் பற்றி நீர் நாட்ட முண்டாகாதவாறு தோற்றம் உண்மையன்றெனவுணர்த்துதல்போலத் தத்துவப்பிரபஞ்சங்களினின்றும் விடுதலெய்தினும் பரமுத்தியாகிய அதீத நிலைக்கட் சென்றது வாயடங்கும் வரை மலந் தேய்ந்து தேய்ந்திருத்தல் பற்றித் தேகந் தோன்றும்; தோன்றவே அது பற்றி யுண்டாம் வாதனையும் தேய்ந்து தேய்ந்து தோன்றும்; அது ஆன்மாவிற்கழுக்காம்; மலம் அறவே நீங்கும் வரை அழுக்கு நீங்குதற்குரியவுபாயத்தை யுணர்த்தவேண்டுதல் முறைமையாதலின் எட்டாஞ் சூத்திரத்தில் விடுபட்ட தத்துவப் பொருள்கள் மலங்காரணமாய்த்தோன்று

மார்தலால் ஒன்பதாஞ் சூத்திரத்தில் அத்தோற்றம் பொய்யென்றுணர்த்துதல் பதிஞானத்துளழுந்தி நிற்றற்குத் துணையாமாதலின் ஆன்மாவிற்குச் சுத்தியாமென்க.

## சிவயோகம்.

இனிப்பதி ஞானத்துளழுந்தி நின்ற ஆன்மாவிற்கு ஞானத்தோடு பிரிப்பின்றி நிற்கும் முதல்வனுடன் தாடலை போலுங் காறலை போலும் இரண்டறக் கூடுதலாகிய சிவயோகம் அதன் பின்னே நிகழும். இதனை "அவனே தானேயாகிய அந்நெறியேகனுகி" யெனச் சிவஞானபோதம் பத்தாஞ் சூத்திரத்திற் கூறியவாறு பற்றியுணர்க. இதுவே நின்மல துரியம்.

இச்சூத்திரத்திற்குச் சிவயோகமுணர்த்துதனுதலிற்றென்னுது பாச க்ஷயம் பண்ணுமாறுணர்த்து தனுதலிற்றென்று கருத்துரை கூறிய தென்னையெனின், தத்துவ ரூப முதல் சிவபோக மீறுயுள்ள பத்தும் ஆன்மாவின் மல நீக்கத்தின் பொருட்டே வேண்டப்படும்: அம்மலம் இதுகாறும் கூறிய உபாயங்களாற் குறைந்து தேய்ந்திருந்து

இச்சிவயோகத்தில் அறமவ நீங்குதலால் பாச க்ஷயம் பண்ணுமாறுணர்த்துதனுதலிற்றென்றுரெ ன்க.

அற்றாயின் சிவபோகமும் மல நீக்கத்திற்குபா யமெனக் காண்டுமென்றே மலம் இங்ஙனே முற்று நீங்குதலின் அவ்வுபாயம் வேண்டாவெனவும் வேண்டினும் அது மல நீக்கத்திற்குச் சாதனமா மாறில்லையெனவும்பெறுமாலோவெனின், பெறாது. என்னே? சிவானந்த வெள்ளமாய் நேயத்தழுந்துத லானே விடுபட்ட மலம் மீளப்பற்றாதாதலின் மேற் கூறியவாறு அங்ஙனம் பற்றாமைகாரணமாய் நேயத் தழுந்துதலாகிய சிவபோகம் வேண்டுமென்றும் அதீதநிலையடைந்து அதுவாய் நிற்கும்வரை அதற் குக் கீழுள்ளதெல்லாம் மல நீக்கத்திற்குச் சாதன மாதலின் நேயத்தழுந்துதலாகிய அது கீழுள்ள வற்றை நோக்கிப் பயனுயினும் மேலுள்ளதை நோ க்கி மல நீக்கத்திற்குச் சாதனமென்றுமுணர்க.

இதுவன்றிப் பாச க்ஷபம் பண்ணுவதாகிய ஈண்டுக் கூறுஞ் சிவயோகத்தையும் பயனெனக்

கூறியிருத்தலால் அதற்கும் இவ்வாறே பொருள் கொள்க.

நேயத் தழுந்துதல் கூறிய பின் சீவன் முத்தனியல்புகூறும் பன்னிரண்டாஞ் சூத்திரத்தில் "அம்மலங் கழீஇ" யென்பதனால் அதீதத்திற் சென்றடங்கும் வரை மல நீக்கத்திற்குச் சாதன முண்டென்பதையு முணர்க.

## சிவபோகம்.

இனிச்சிவபரம் பொருளோடிரண்டறக் கலந்த வான்பாவிற்கு அகத்தினும் புறத்தினும் அகம் புறமென்னும் பேதமின்றிச் சகசநிட்டையோடு பேரானந்தப் பெருவெள்ளத் தழுந்துதலாகிய சிவபோகம் அதன்பின்னே நிகழும். இதுவே நின்மலதுரியாதீதம். இதனையே சிவஞானபோதம் பதினொன்றாஞ் சூத்திரத்தில் "அயாராவன்பி னரன்கழல்செலுமே" யெனக்கூறியருளினர்.

இவ்வாறு தத்துவரூபமுதல் சிவபோக மீறுயுள்ள பத்தும் தோன்று முறையும் உடனிகழ்ச்சியும் காண்க.

அனுபவ இயல் முற்றிற்று.

# மூன்றுவது காட்சி இயல்.

அநுபவஇயல் கேட்டபின்னர் அநுபவமாய்த் தோன்றுவதெல்லாம் காட்சியேயென்பது ஒரு தலை யாதலின் அவை அநுபவமாங்கால் உண்டாம்காட்சி நிருவிகற்ப முதலியவற்றுள் யாதோ வென்னும் அவாய்நிலையை நிரப்புமாறு மூன்றுவது காட்சியி யல் கூறப்படுகின்றது.

அஃதாவது மேலையியலிற் கூறிய தசகாரியத் தைக் காட்சியின் வைத்து விளக்கலாம்.

காட்சி, பொருள் பற்றி யுண்டாமாயினும் காணப்படும் உலகப் பொருளென்றும் காணப்ப டாத பதி பசு பாசப்பொருள்களென்றும் பொரு ளிருவகைப்படும். உலகப் பொருளில் தெரியாத பொருள் தெரியவரும் போதுண்டாங்காட்சி இந்தி ரியத்திற்கும் தெரியும் பொருள் நீங்குவதிலுண் டாம் காட்சி அறிவுக்குமாமாறுபோலப்பதிபசு பாசமென்னும் பொருள்களின் காட்சியின் அறி வில் வைத்துக் காணவேண்டுவது முறைமையாம்.

இனிக்காட்சியும் இந்திரியக்காட்சி, மானதக் காட்சி, தன் வேதனைக்காட்சி, யோகக்காட்சியெ(ன)ன நான்காம். அவற்றுள், மானதம் தன்வேதனை யோக மாகிய மூன்றும் நேரேயறிதலின்றியும் இந்திரியக் காட்சி நேரேயறிதல்பற்றியும் நிகழ்வனவாம். ஆத லின், அறிவால் நேரே அறிதல் மாத்திரையே ஈண்டெடுத்துக் கொள்ளப்படும்.

நேரேயறிதலென்னு மிக்காட்சி நிருவிகற் பம் ஐயம் விபரீதம் தெளிதலென நான்காம். இங் ஙனமாகவும் சிவஞான பாஷியத்தில் திரியக் காண் டலும் இரட்டுறக் காண்டலும் தெளியக் காண் டலுமெனக் காட்சி மூன்றெனவும் சிவஞான போ தச் சிற்றுரையில் நிருவிகற்பமாய்க் காண்டலும் இரட்டுறக் காண்டலும் தெளியக் காண்டலும் என க்காட்சி மூன்றென்னவும் கூறியிருத்தல் முரணும் போலுமென மலையற்க. என்னை? நிருவிகற்பக் காட் சியினும் விபரீதக்காட்சியினும் உண்மைப் பொருளை யறியாமையே பெறப்படுதலின் பாஷியத்தில் நிருவி கற்பத்தை விபரீதத்துள் அடக்கியும் சிற்றுரையில்

விபரீதத்தை நிருவிகற்பத்துள் அடக்கியும் கூறினு ரென்க.

அங்ஙனமாயினும் ஐயத்தின் பின்னன்றோ விபரீதம் நிகழும் அதற்குமாருக ஐயத்தின்முன் னர் விபரீத நிகழ்ச்சி கூறியது எவ்வாறு பொருந்து மெனின், தெரியாத பொருள்கள் தெரிய வரும்போது ஐயம்முன்னும் விபரீதம் பின்னுகவும் தெரியும் பொருள்கள் விடுதலை யடையும்போது விபரீதமுன்னும் ஐயம் பின்னுகவும் நிகழுமாதலிற் பொருந்துமென்க,

ஆகவே, இத்தசகாரியத்தைத்திரியக்காண்டல் இரட்டுறக் காண்டல் தெளியக்காண்டல் என்னும் மூன்றினுள் வைத்துக்காண வேண்டுவது முறை மையாம்.

தானல்லாத தத்துவங்களின் இலக்கணங்களைக் காணுங்கால் உள்பொருளாய்த் தோன்றும் அப் பொருள்கள் யதார்த்தத்தில் தோன்றி யழிதல் நிலையனவாய சடப்பொருளா யிருந்தும் அறிவில்

நிலைபேறுடைய அறிவுடைப் பொருளோடொப்பக் காண்டலாகிய தத்துவரூபம் திரிபுக்காட்சி.

தத்துவங்கள் மலகாரியமென்றும் அறியாமை யுடையதென்றும் விசாரித்தறியினும் அதில் நிலைபெறாத தத்துவதரிசனம் ஐயக்காட்சி.

தானல்லாததத்துவக் கூட்டங்கள் உண்மையில்தானல்லவெனநீங்கலாகிய தத்துவசுத்தி தெளிவுக் காட்சி.

தனக்குச் சுதந்தர அறிவின்றாயினும் முதல்வனும் பாசமும் உண்டென்றுணரும் சுதந்தர அறிவுடைப் பொருளாய்த் தன்னைக் காண்டலாகிய ஆன்மரூபம் திரிபுக்காட்சி.

அருளையும் தன்னையுங்கண்டு ஒன்றில் அழுந்துதலில்லாமையாகிய ஆன்மதரிசனம் ஐயக்காட்சி.

முதல்வனையின்றித்தனித்து நில்லாத தன்னை அவ்வாறு உள்ளபடிகண்டு முதல்வனைச் சார்ந்து நிற்றலாகிய ஆன்மசுத்தி தெளிவுக்காட்சி.

சிவபரம்பொருளைக் குருவடிவிற்காண்டலாகிய சிவரூபம் விபரீதக் காட்சி.

முதல்வன் வியாபகத்தைப் பகுத்தனுபவித்தலாகிய சிவதரிசனம் ஐயக்காட்சி.

முதல்வனோடு கூடுதலாகிய சிவயோகமும் முதல்வன் இன்பத்தழுந்துதலாகிய சிவபோகமும் தெளிதலின் பாலுள்ளதாயினும் காண்பான் வேறு நிற்பதின்றாகலின் அவற்றைக் காட்சியில் வைத்தெண்ணுதல் கூடாதென்பது தோன்ற யோக போகமெனக் கூறியதென்க.

காட்சியியல் முற்றிற்று.

நூல் முற்றிற்று.

## தசகாரியத்தை விளக்கும் நூல்கள்.

## க. உண்மைநெறிவிளக்கம்.

மண்முதற் சிவமதீறுய் வடிவுகாண்பதுவே ரூப
மண்முதற் சிவமதீறுய் மலஞ் சட மென்றல் காட்சி
மண்முதற் சிவமதீறுய் வகையதிற் றுனிலாது
கண்ணுதலாருளா னீங்கல் சுத்தியாய்க் கருதலாமே.

பாயிருணீங்கி ஞானந்தனைக் காண்டலான்ம ரூப
நீயு நின் செயலொன்றின்றி நிற்றலே தரிசனந்தான்
போயிவன்றன்மை கெட்டுப் பொருளிற் போயங்
[குத்தோன்று
தாயிடிலான்மசுத்தி யருணூலின்விதித்தவாறே.(2)

எவ்வடிவுகளுந்தானு மெழிற் பரைவடி வதாகிக்
கவ்விய மலத்தான் மாவைக் கருதியே யொடுக்கி
யாக்கிப், பவ்வம் விண்டகலப் பண்ணிப் பாரிப்பா
னொருவனென்று, செவ்வையே யுயிரிற் காண்டல்
சிவரூபமாகு மென்றே. (3)

பரை யுயிரில் யானென தென்றற நின்றதடியாம் பாரப்பிட மெங்குஞ் சிவமாய்த் தோன்றலதுமுக மா முறைபிறந்த சுகமதுவே முடியாகு மென்றிவ் வுண்மையினை மிகத் தெளிந்து பொருள் வேறென் றின்றித், தரை முதலிற் போகாது நிலையினி னில் லாது தற்பரையினின் றழுந்தா தற்புதமே யாகித், தெரிவரிய பரமானந்தத்திற் சேர்தல் சிவனுண் மைத் தரிசன மாய்ச் செப்பு நூலே. (4)

எப்பொருள் வந்துற்றிடினு மப்பொருளைப் பார்த் தங் கெய்து முயிர் தனைக் கண்டிங் கவ்வுயிர்க்கு மேலா, மொப்பிலருள் கண்டு சிவத் துண்மை கண் டிங் குற்றதெல்லா மதனாலே பற்றி நோக்கித், தப்பினைச் செய்வது மதுவே நினைப்பு மதுதானே தருமுணர்வு புசிப்பு மது தானேயாகி, யெப்பொ ருளு மசைவில்லை யெனவந்தப் பொருளோ டிசை வதுவே சிவயோக மெனு மிறைவன் மொழியே. ()

பாதகங்கள் செய்திடினுங் கொலைகளவு கள்ளுப் பயின்றிடினு நெறியல்லா நெறிபயிற்றி வரினுஞ்

சாதி நெறிதப்பிடினுந் தவறுகள் வந்திடினுந்
தனக் கென்வோர் செயலற்றுத் தானதுவாய் நிற்
றுதனிவனுடலு யிராயுண்டுறங்கி நடந்து [கி
நானு போகங்களையுந் தானுகச் செய்து
பேதமற நின்றிவனைத் தானுக்கி விடுவன்
பெருகு சிவபோகமெனப் பேசு நெறியிதுவே.( )

## உ. பதிபசுபாசவிளக்கம்.

தரை முதனுத மீருய்த் தனித்தனிக்காண்டல் ரூ
பந், தரை முதனுத மீருய்த் தற்செயல் காண்டல்
காட்சித், தரை முதனுத மீருய்ச் சடமய மென்று
கண்டு, குருபரன்ரு ளானீங்கல் சுத்தியாய்க் குறித்
துக் கொள்ளே. (1)

தத்துவா தீதந் தன்னிற் சகசவாண வமலந்தா
னுற்றிடு மிதற்குச் சாக்கி நானென வுயிர்க்கு ரூபஞ்
சித்துரு நானே யென்று தேறலே தெரிசனந்தான்
முற்றுண ரீசன் முன்னர் முகிழ்த்திடா தடங்கல்
[சுத்தி. (2)

எங்கணுஞ் சிவனுளா னென்றுணர்தலே யிறைவன்
ரூபமங்கவன்றெழிலெங் கண்ணுமறிதலே தெரி
சனந்தான், திங்கள் வேணிய ஞேடொன்றல் சிவ
யோகமலர் மணம் போற், புங்க நேயத் தழுந்தல்
போக மென்றறையு நூல்லை. (3)

## ௩. உபதேசமாலை.

பூதமுத னாதமீ ரூகப் பொலிகின்ற
வீதெல்லா நாமல்லவென்றறியும்—போதமே
தத்துவரூ பம்மிதனைச் சங்கையற்ற மானவக
புத்தியிடை நன்ருய்ப் புதை. (1)

தத்துவங்க ளெல்லாஞ் சடநம்மைத் தானறியாச்
சித்துரு நாமென்று சிறிதத்தைக்—கைத்தழியக்
காண்பதுவே காட்சியிதைக் கைக்குண்மா னெல்லி
காண்பதுமாணு நீ கடன். (3) [யெனக்

ஆனு நெடுங்கால மந்தோ நமைமறைத்துத்
தானுகச் செய்ததிந்தத் தத்துவங்கண்—மேனுடி
யின்றுகடந் தேறநமக் கீசனருட் கைதந்தா
னென்றுணர்தல் சுத்திய கெண். (3)

காரிருளோ மைக்குழம்போ காரோ வெனக்கலுழ்
ந்து, பேரிருளா மாணவத்தைப் பின்னிட்டே—
யோர்வரிய, மன்னுருவே நாமென்று வள்ளலருளா
லறிதல், நின்னுருவ மாணுநிலை. (4)

என்று பிறந்தேனு னென்று வளர்ந்தேனு
னென்று துயருற்றிறந்தேனு—னென்று
பழியாத சித்துரு நானென்றே மகிழ்தல்
நழுவாத நின்றரிசனம். (5)

பாசமாய் நின்றதுவும் பல்பிறப்பிற்சென்றதுவு
மாசிறவவிர்தமாற்றியது—மீச
னருளாலே யென்றுதனக்காதிக்கமில்லையெனத்
தெருள லுயிர்க் சுத்தியெனத் தேர். (6)

எங்குஞ் சிவமயமா யெங்குஞ் சுகவடிவா
யெங்குஞ் சிவலோகத்தெல்லையா—யெங்குஞ்
சிவனையே கண்டு தெரிசித்தன் மாணு
சிவரூப மென்றே தெளி. (7)

ஆக்கலளித்த லழித்தன் மறைத்தலரு
ளைக்கலிவை யெவ்விடத்து நோக்கியே—நீக்கமறப்

புல்லியுயரானந்தப்பொற்பின் மிசையேற
னல்லசிவதரிசனம். (8)

அன்னியமேயில்லை யெனக்காருயிராமீசனென
வுன்னியவன்றானுகயோகஞ்செய்—தென்னினைவு
மற்றவனேயானே மென்றுளந்தத்தெய்தலரு
ளுற்றவனே யோகமெனவோர். (9)

நானே சிவன்சிவனேநானென்று நாடிவெறுந்
தானாகின்றநிலைதானன்றோ—வானுப்
பவசலதி நீந்திவரும் பண்புடைமானு
சிவபோக மென்றே தெளி. (10)

## ௬. தணிகைப்புராணம்.

# நந்திஉபதேசப்படலம்.

மன்முதலாசச் சிவமுடிவாகமலிதரு தத்துவமெல்
லா, நண்ணியதொழிலைத தனித்தனிகாண்டனவை
தருமதனுருவாகுங், திண்ணியவவைதாஞ்சடமென
க்காண்டறிசன மின்டயிவைநீங்கு, முன்னை

லயக்காண்டல் சுத்தியாமூன்று முற்றனபாசத்தின்
மாட்டு. (1)

இன்னணம் பாசமகறலு முறவுமிகலுறுபகையு நா
டாது, மன்னியதானே முதலென நிற்றல் மாசுயிர்
க்குருவிதுகாறு, மன்னியத்தழுங்குநினக் குயிரருள
ன்றகற்றவவ்வருளினுன் முதலென், றுன்னுதல்
காட்சியுது கொடுசெயனோர்ந்தொழிந்தருளாய் வி
டல் சுத்தி. (2)

மேதகுமருளான் முதலென நினைத்தல் விழுத்தகு
மருளினலது செய், தீதறுதொழில்கள் செய்வலெ
ன்றெண ணுஞ் செயலறறிகழருண்மயமாய்ப், போ
தமுற்றொடுங்கலென்ன முன்கிளர்ந்து போந்தவற்
றடங்கிய மூன்று, மாதிதனுருவந்தெரிசனம்யோக
மாமினிப் போகமுமருள்வாம். (3)

ஒன்று றமதனுலொரு பொருளாாதிரண்டி றல்
வேறுமாகாது, தொன்று றுநிலேயே நிலையதாய்ச்
சேர்ந்து துன்னலுந்துன்னுருமையுமற், றன்று
மாணவத்தின மூந்தியாங்கறி வாயறிவினுளமுந்திய

ங்கறிவு, பொன்றியும் பொன்றுதலு மா யின்பப் புணரிவாய்மடுப்பது போகம். (4)

இந்நிலைதனக்கு மேலொரு நிலையுமில்லை யீதொழி தராதென்று, மன்னுயிர்மற்றையொன்பதுங்கண்டு மாற்றுமால் வகுத்த வீரைந்துந், துன்னியவுண்மை ஞானமென்றுரைப்ப சுத்தசைவந்த வத்தையுளடங் கும், பின்னிலை நான்கினென்பது மடங்கும் பெரு நிலை போகமேயடங்கும். (5)